பக்கங்கள்-16 | 23.ஐப்பசி.2022 | விலை–40.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –386



## ஜெனீவா தீர்மானங்களும் தமிழினப் படுகொலைகளும் கூறும் செய்தி என்ன?


## நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கவைத்துள்ள சிங்கள பேரினவாத கட்சிகளின் தலைமைகள்

## இலங்கை புலனாய்வுக்கட்டமைப்பு மீட்சி பெற வேண்டும் – இல்லையேல் ஆபத்து

## விடுதலைப்புலிகளின் போராட்டத்தை விற்றுப்பிழைக்கும் தமிழ் அரசியல் கட்சிகள்

# ஜெனீவா தீர்மானங்களும் தமிழினப் படுகொலைகளும் கூறும் செய்தி என்ன?

**கிழக்கு மாகாண முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களுடனான நேர்காணல்**



**கேள்வி :- இதுவரை இடம்பெற்ற ஜெனீவா அமர்வுகள் பற்றியும், இலங்கை அரசின் நிலைப்பாடுகள் குறித்தும், தமிழ் மக்களின் செயற்பாடுகள், இனிவரும் காலங்களில் தமிழ் மக்களது தீர்வுக்கான சாத்தியப்பாடுகள் தொடர்பிலான உங்களது கருத்து என்ன?**

பதில் :- இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ஐ.நாவில் 1955 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி தான் அங்கத்துவம் பெற்றதொரு நாடானது. அதன் பின்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கத்திற்கு எதிராக மனித உரிமை மீறல் செயற்பாடுகள், இனப்படுகொலைச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக 1958 ஆம் ஆண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் நடைபெற்றாலும் கூட, 2009 ஆம் ஆண்டின் மே 18 இல் இறுதி யுத்தத்தில் தான் இலங்கை அரசாங்கம் பாரிய இனப்படுகொலையினைச் செய்திருக்கிறது என்பது யாவருக்கும் தெரிந்த விடயம்.

அதனால் தான் 2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைச் சபையிலே 47 நாடுகளை முன்னிறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும் பின்னர் இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டதும் தற்போது அதே நாடுகள் இலங்கைக்கு எதிராக பிரேரணையை ஐ.நா மனித உரிமைச் சபையிலே நிறைவேற்றியிருக்கின்றன. இதில் 20 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவும், 07 நாடுகள் இலங்கைக்கு எதிராகவும் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐ.நாவில் சமர்ப்பிக்கப்படுகின்ற தீர்மானங்கள் அனைத்திலுமே இங்கே இருக்கின்ற இனப்படுகொலை அல்லது இலங்கை தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றது என்கின்ற தமிழ் மக்களுக்கான தீர்வு விடயங்கள் அல்லது தமிழர்கள் என்கின்ற ஒரு இனத்திற்கான தீர்வுகள் குறித்து தெளிவாக வலியுறுத்தப்பட்டு வெளியிடப்படவில்லை. குறிப்பாக இலங்கையில் சில விடயங்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றது. சில விடயங்கள் செய்யப்படவேண்டியிருக்கிறது. பொருளாதாரத்திற்கு எதிராக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூட அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆகவே இதில் தமிழ்த் தரப்பினை பொறுத்தமட்டில் பல்வேறுபட்ட கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம் அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கலாம். இலங்கையில் இருக்கின்ற தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள், அதைவிட புலம்பெயர்ந்து இருக்கும் பல்வேறுபட்ட அமைப்புக்கள், சுயமாக இயங்கக்கூடிய மனித உரிமை அமைப்புக்கள் போன்ற இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை அறிக்கைகளாக அங்கு சமர்ப்பித்ததன் விளைவாக அதனை ஆராய்ந்து இந்த இறுதி அறிக்கை இப்போது வெளிவந்திருக்கிறது என்பதையே நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இந்த விடயத்தை நேரடியாகவே இலங்கையில் இருந்து சென்ற இலங்கையின் பிரதிநிதி அவர்கள், இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் அல்லது இதனை நிராகரிக்கின்றோம். ஜனநாயகத்திற்கு எதிராக சர்வதேச சமூகத்தின் விசாரணைகளை அல்லது மேற்பார்வையினை நாங்கள் நிராகரிக்கின்றோம் என்கின்ற விடயத்தையே தொடர்ச்சியாக 2012 இலிருந்து தற்போதுவரை அவர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள். ஒவ்வொரு முறையும் புதிதாக வருபவர்களுக்கு காலம் தேடிக்கொடுக்கின்ற விடயமாகத்தான் இந்த ஜெனீவா தீர்மானங்கள் இலங்கை விடயத்தில் இருக்கின்றதை நாம் பார்க்கின்றோம்.

இம்முறையும் இந்தப் பிரேரணையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எல்லா விடயங்களும் சார்பாக இல்லாவிட்டாலும் கூட ஒரு சில விடயங்கள் இலங்கைக்கு எதிராக தாக்கம் செலுத்தக்கூடிய வகையில் இருப்பதாகபேசப்படுகின்றது. ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். குறிப்பாக இந்த மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் என்று அடையாளங்காணப்பட்டவர்கள் சர்வதேச நாடுகளுக்குச் செல்வதை தடைசெய்யக்கூடிய வகையில் இந்த அறிக்கையில் சில விடயங்கள் இருப்பதாக கூறப்படுகின்றது. உதாரணமாக, கடந்த வாரத்தில் கனடாவில் மூன்று இராணுவ தளபதிகளை தடைசெய்த விடயம் செய்திகளாக வெளிவந்ததை பார்க்கக்கூடியதாகவிருந்தது. இலங்கை ஐ.நாவில் அங்கத்துவம் பெற்றிருக்கின்ற காரணத்தால் வெளிவந்த அறிக்கைக்கு ஏற்ப பதில் கூறவேண்டிய கடப்பாடும் இருக்கிறது. உண்மையில் இலங்கையின் உயர் அதிகாரிகளை சர்வதேச நாடுகள் தடைவிதிக்கின்ற போது இவ்விடயம் இலங்கைக்குள் பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தும் இராஜதந்திர ரீதியாக. எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாச கூட இவ்விடயம் குறித்துப் பேசியிருக்கின்றார். சர்வதேச சமூகத்தின் எதிர்ப்புக்களை சம்பாதிப்பது எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதை ஏற்கனவே அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே தமிழ் மக்களாகிய நாங்கள் கூறுவது இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றிருக்கிறது. அதனை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும் என்பதே தமிழ் மக்கள் தரப்பில் இருந்து எழுகின்ற விடயம். யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களைக் கடந்துவிட்டது. ஆனால் இதுவரை தமிழ் மக்களுக்கான எவ்வித தீர்வுகளும் இன்றி இன்றும் வீதிகளில் போராடி வருகின்றனர். தொடர்ச்சியாக இந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. இதனை உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியிலான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன. சர்வதேச அளவில் தெரியப்படுத்தி வருகின்றன. எனவே உள்நாட்டுப் பொறிமுறையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே வெளிநாட்டு சக்தி ஒன்றுடன் சுயமாக விசாரணைகள் இடம்பெற்று தீர்வுகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பதையே தமிழ் மக்களாகிய நாம் பரவலாகக் கூறிவருகின்றோம்.

அண்மையில் மட்டக்களப்பில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில், ஐ.நா சபையின் முன்பும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளினால் கூறப்படும் விடயம் என்னவெனில், ஐ.நா சபையால் கொண்டுவரப்பட்ட விசாரணையை ஜனாதிபதியால் ஆணைக்குழுவை அமைத்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்கிற விடயம் ஏற்கனவே வலியுறுத்தப்பட்டாலும் கூட அந்த விசாரணையை இலங்கையில் செய்ய நம்பிக்கை இல்லை என்பது பரவலாக கூறப்படுகின்றது. ஏனென்றால் நாம் பல தடவைகள் ஏமாற்றமடைந்த ஒரு இனமாக இருக்கின்றோம். அவர்கள் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு இலட்சம் நட்ட ஈடு வழங்குவதாக கூறப்பட்டது. மரணச் சான்றிதழும் வழங்குவதாகக் கூறப்பட்டது. அதைக்கூட பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் எங்களுக்குத் தேவையில்லை, எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான நீதியே தேவை என்பதை உலகறிய வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். தொடர்ந்தும் கூறி வருகிறார்கள்.

இன்று புதிய ஜனாதிபதியாக வந்திருக்கின்ற கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சியிலே இரண்டு இலட்சம் தருவதாகக் கூறி, விசாரணைகள், ஆணைக்குழுக்கள் என சர்வதேச ரீதியாக கண்துடைப்புக்கள் மீண்டும் இடம்பெற்று வருவதன் காரணமாக இதனை முற்றாக நிறுத்த வேண்டும் என கூறப்படுகின்றது. இதனை சர்வதேசம் கையாள வேண்டும். தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசின் நயவஞ்சக செயற்பாடுகள் குறித்து நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஆனால் இலங்கை அரசு தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றியே வருகின்றது. ஐ.நாவில் அங்கம் வகிக்கின்றபோதிலும் ஐ.நாவின் பிரேரணைகளை கடுமையாக எதிர்த்து வருகின்றது. சர்வதேச மனித உரிமை சட்டதிட்டங்களை மதிக்க மறுத்து வருகின்றது. இலங்கை அரசின் பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களாக தமிழ் மக்கள் இல்லை என்பதை 2009 ஆம் ஆண்டின் பின்னரே நிரூபித்துவிட்டார்கள். அரசாங்கத்தின் செயற்பாடுகளை முற்றாக தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள். குற்றம் செய்த அரசிடமே நீதியை நாங்கள் எதிர்பார்க்கவியலாது என்பது உண்மை. இதனை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

எங்களுக்கு நிதி தேவையில்லை நீதி வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது, அதன் பின்னணி என்ன?, என்கிற விடயங்களை முன்வைத்தே போராடுகின்றார்கள். எங்களுக்கு ஒரு இலட்சம் அல்லது இரண்டு இலட்சம் வேண்டும் என தமிழ் மக்கள் அரசிடம் கோரவில்லை. பணம் கோரி போராட்டங்கள் வீதியோரங்களில் இடம்பெறவில்லை இதனை அரசாங்கம் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை தற்போது நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான ஐ.நாவின் பிரேரணைக்கு இலங்கை பதில் வழங்காது. அந்த அறிக்கையினை பின்பற்றி எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கான நீதியை வழங்காது இழுத்தடிப்புச் செய்து காலத்தை வீணடித்து, சர்வதேச சமூகத்தை ஏமாற்றினால், போலியான வாக்குறுதிகளை இனியும் சர்வதேச ரீதியாகக் கூறிவந்தால் எதிர்காலத்தில் இலங்கையின் ஆட்சியாளர்கள் சர்வதேச ரீதியாக பாரிய அழுத்தங்களை பின்னடைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை வரும்.

இனிவரும் காலங்கள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. தற்போதைய இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி இலங்கையை வெகுவாகப் பாதித்துள்ளது. வேறு வழியில்லாமல் சர்வதேச சமூகத்தை நம்பிஇருக்கவேண்டியநிலையில் இருக்கும் இலங்கையரசு, தன்னை சுயபரிசோதனை செய்துகொள்ளவேண்டும்.

ஐ.நா மனித உரிமைப்பேரவையானது தான் எடுத்த முடிவுகளை பின்வாங்குவது நடக்காத காரியம். சர்வதேச ரீதியிலான மனித உரிமை அமைப்புக்கள் இலங்கையை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன. கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றன. ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம், இலங்கை தொடர்பில் திருப்தியடையவில்லை. ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை இன்னமும் இழுபறியில் இருக்கிறது. எதிர்வரும் காலங்களில் இப்பிரேரணையின் மூலம் இலங்கையில் மாற்றங்கள் வரக்கூடிய நிலை இருக்கிறது. நடைமுறைப்படுத்தாதபோது மேலும் ஐ.நா தீர்மானங்கள் கடினமானதாக மாற்றமடைந்தால் மேலும் இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடிக்குள் அகப்படும் என்பது உண்மை. இதனடிப்படையில் எதிர்வரும் நாட்களில் சர்வதேச விசாரணைக்கான பிரேரணைகள் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்படலாம். பொறிமுறைகள் உருவாக்கப்படலாம் என நான் நினைக்கிறேன்.

**கேள்வி :- ஏற்கனவே வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை என்கிற தீர்மானம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இது குறித்து உங்களது கருத்து என்ன?**

பதில் :- வட-கிழக்கின் மாகாண சபைகள் தற்போது இரண்டு. எங்களது 37 உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட வட மாகாண சபையில்

11ஆம் பக்கம் பார்க்க...

**நேர்காணல் : இரனியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## பொருளாதார நெருக்கடியும், தேர்தல்களும்

ஆசியாவின் அதிசயமான இலங்கை சுதந்திரமடைந்து 74 வருடங்களைக் கடந்து விட்டபோதிலும், மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை சமூகத்தினரால் சரிவர இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரமான முறையில் நிலையாகப் பேண இயலாத நிலை தொடர்கின்றது. முறையற்ற பொருளாதாரக் கொள்கைகளும், சரியான திட்டமிடல்கள் இல்லாமையும், திட்டங்களை சரியாக அமுல்படுத்தாமலும், அரசியல் ஸ்திரத்தன்மையும் இலங்கையின் மூவின மக்களையும் சொல்லொனாத் துன்பங்களுக்குள் தள்ளியுள்ளது.

தமிழினம், சிங்கள மற்றும் முஸ்லீம் மக்களில் இருந்து எதிர்கொண்ட, எதிர்கொள்ளும் சவால்கள் - பிரச்சினைகள் இந்த நாட்டில் வேறுவிதமாக இருந்தாலும், பொதுவாக நாடு என்று பார்க்கின்ற போது பொருளாதார வீழ்ச்சி அனைவரையும் வெகுவாகப் பாதித்துள்ளது. உலகம் முழுவதும் பரவிய கொவிட் வைரசின் தாக்கத்தினால் உலக நாடுகள் கடுமையாகப் பாதிப்பினை எதிர்கொண்டன. அதில் இலங்கையும் உள்ளடக்கம். இலங்கையின் அனைத்துத் துறைகளும் ஏன் நாடும் பெரும் முடக்கத்தினை எதிர்கொண்டது. பாடசாலைகள் மூடப்பட்டதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு பின்தங்கிப்போயுள்ளது. அனைத்து தொழிற்துறைகளும் பெரும் பாதிப்படைந்துள்ளது. சுற்றுலாத்துறை வெகுவாகப் பாதித்தது. இலங்கையின் உற்பத்தித் துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. ஏற்றுமதித்துறை சரிவைச் சந்தித்து. விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்தன. கோட்டாபய ராஜபக்ச அரசின் உர இறக்குமதித் தடையால் உணவு உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டது. நாட்டில் பாரிய போராட்டங்கள் ஏற்படக் காரணமாக இருந்தது.

இவ் நெருக்கடியான சூழலில் இலங்கையின் அரசியலில் ஏற்பட்ட தளம்பல்கள் மக்களை வெகுவாகப் பாதித்தது. கடந்த கால அரசுகளின் தவறுகளே இன்றைய இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் வெறுமனே கொவிட் மாத்திரமல்ல என்பது உண்மை. இச் சூழலில் தான் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பதவியேற்றுள்ள நிலையில், இலங்கை வாழ் மக்கள் இன்று வேகமாக நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

உள்நாட்டில் வாழ்வதற்கு சாதகமான நிலை இல்லை என்பதை அறிந்து, தொழிலுக்காக மத்திய கிழக்கு நாடுகளை நாடுவோர் அதிகரித்துள்ளனர். அரசும் இதன் மூலமாக அந்நிய செலாவணி கிடைக்கும் என்கிற ரீதியில் அரச ஊழியர்களும் விடுமுறையில் வெளிநாடு சென்று உழைப்பதற்காக அனுமதியும் வழங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடியினை சீர்செய்யும் தேவை அரசுக்கு முன் இருக்கும் மிகப்பெரிய சவால். அதனைவிட கலைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைகளுக்கானத் தேர்தல் குறித்து பரவலாகப் பேசப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் தற்போதைய சூழலில் மாகாண சபை தேர்தலை விடுத்து, அடுத்த வருடம் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்றே தெரிகிறது. உடனடியாக ஜனாதிபதித் தேர்தலுக்கான வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிறது. தற்போது இலங்கை இருக்கக்கூடிய நெருக்கடிச் சூழலில், ஜனநாயக நாட்டில் மக்கள் நிம்மதியாக வாழவும், நாடு வளம் பெறவும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முறையான வேலைத்திட்டங்களே மிகவும் அவசியம்.

# 191 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



கெரில்லா எதிர்ப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பிரதான படைகளாகத் "தேசிய" அமைப்புக்களின் ஆயுதப் படைகளை மாத்திரமே பயன்படுத்தவேண்டு மெனக் கருதப்படுகின்றது. ஆனால், அமெரிக்க இராணுவத்தின் நிரந்தரப் பிரிவுகளும் படைப்பிரிவுகளும் அப்பிரதேசத்தின் கெரில்லா எதிர்ப்புப் படைகளின் நிரந்தர சேமப்படையாக இருக்க வேண்டும்.

கெரில்லா எதிர்ப்புச் செயற்பாட்டுப் பொறுப்புப் பிரதேச வலயங்கள் வழக்கமாக பற்றாலியன்களுக்கென நியமிக்கப்படுகின்றன அவற்றினது எல்லைகள் நிர்வாகப் பிரதேச எல்லைகளுடன் பொருந்துவதாக இருக்கும்படி வகுக்கப் பரிந்துரைக்கப்படுகின்றது.

இதன் நோக்கம் யாதெனில், பிரதேச நிர்வாகத்தினருடன் தொடர்புகளைப் பேணுவதில் மிகவும் சுமுகமான நிலைமைகள் தோன்றும் என்பதனாலாகும். புற்றாலியனுக்குப் பொறுப்பான வலயம் கொம்பனிகளுக்குரிய வலயத் துண்டுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையும் வழக்கமாகப் பிளாட்டூன்களுக்குப் பொறுப்பான பிரதேசத் துண்டுகளாகப் பிரிக்கப்படலாம்.

பொறுப்பு வலயங்களதும் பிரதேசத் துண்டுகளதும் அளவுகள் கெரில்லா எதிர்புச் செயற்பாட்டுப் பிரதேசத்தின் சூழ்நிலைகளில் தங்கியிருக்கின்றது. பற்றாலியனுக்கு 3000சதுர மைல் (7700சதுர கி.மீ. அதாவது 88 87.5கி.மீ) வரையான பரப்பைக் கொண்ட வலயம் நியமிக்கப்படலாம். இந்நிலையில் கொம்பனியின் பொறுப்புப் பிரதேசத் துண்டின் பரப்பு பற்றாலியனின் முழுப் பொறுப்பு வலயத்தைக் கொண்டதாக இருக்காது. இவ்வாறான சூழ்நிலையில் பிரதேசத்தின் வலயங்கள் ஒவ்வொன்றிலும் தொடர்ச்சியான கெரில்லா எதிர்ப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளப் பரிந்துரைக்கப்படுகின்றது.

கெரில்லாப் போரின் வெற்றியை நிர்ணயிக்கின்ற மிகவும் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாக வேவு நடவடிக்கைகளில் ஒன்றாக வேவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் விளங்குகின்றது. இதன்.போது.பிரதான கவனம் யாவும் பின்வரும் விடயங்களை வேவுபார்ப்பதில் செலுத்தப்படுகின்றது. கெரில்லாப் படைகள் முகாமைக்கின்ற முறைகள். முகாமுக்கானதும் கெரில்லாப் படைப்பிரிவுகள் தங்கியிருக்கின்ற பிரதேசங்களினதும் தற்காப்பை ஒழுங்குப்படுத்தல், தற்காப்பு நிலைகள், அவற்றின் பண்புகள், கெரில்லாப் படைகள் இருக்கின்ற இடத்தில் வான்காப்பு ஒழுங்குபடுத்தல்கள் போன்றனவே அவையாகும்.

கெரில்லாப் படைகள் பற்றிய வேவுத்துறையில், உரிய நேரத்தில் வேவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அதனை பயன்படுத்திக்கொள்வதற்கும் பிரதான முக்கியதுவம் கொடுக்கப்படுகின்றது. "சிறிய கெரில்லா அமைப்புக்களது இலாவகத்தன்மையும் நகரும் தன்மையும் அவர்களது அமைவிடம் பற்றிய தகவல்களை வேகமாகப் புளித்துப்போனதாக மாற்றிவிடுகிறது" என அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்படுகின்றது. ஆகவே தான், அடுத்தபடியாக இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. "தகவலைப் பெற்றதிலிருந்து அதனை நடை முறைப்படுத்துகின்ற செயற்பாட்டு ஆரம்பம் வரையான நேரத்தை மட்டுப்படுத்துவதற்காகச் சகல தரத்திலான வேவுகளையும் அதியுச்சபிரயத்தனத்துடன் அவசியம் ஈடுபடுத்தவேண்டும்."

கெரில்லா எதிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்வதற்குத் தேவையான வேவுக்குரிய சகல நடவடிக்கைத் திரட்டுக்களையும் இரண்டு பிரதான பிரிவாக வகைப்படுத்தலாம். இராணுவ வேவு நடவடிக்கை, வேவு நடவடிக்கை, வேவுத் தகவல்களை இரகசியமாகப் பெறும் நடவடிக்கை ஆகியனவே அவையாகும்.

### இராணுவ வேவு நடவடிக்கை

இராணுவத்தரை வேவு இராணுவத்தின் பிரிவுகளாலும் படைப்பிரிவுகளாலும் மேற்கொள்ளப்படுகின்றது. செக்சன் தரத்திலான அல்லது பிளாட்டூன் தரத்திலான ரோந்துகள் இராணுவ வேவின் பிரதான அம்சமாக விளங்குகின்றன. இவர்கள் தாங்கள் தங்கியிருக்கின்ற முகாமிலிருந்து அவர்களுக்குப் (இப்படையணிக்கும்) பொறுப்பான வலய எல்லைக்குள் கெரில்லாக்கள் இருக்கக்கூடிய சாத்திப்பாடுகள் இருக்கின்ற இடங்களிற்கு அனுப்பப்படுகின்றனர்.

கேரில்லாக்கள் பற்றிய வேவுத் தகவல்களின் ஆரம்ப மூலமாக ரோந்து நடவடிக்கைகள் விளங்குகின்றன. கெரில்லாக்களை கண்டுப்பிடிப்பத மாத்திரம் அதனது பணிகளாக இருக்கவில்லை. அத்தோடு, துல்லிய வேவுத் தகவல் தேவைகளுக்காகக் கெரில்லாக்களுடன் நெருக்கமான தொடர்பைப் (தொடர்ந்து கொண்டிருத்தல்) பேணுதல், நேரத்தை வெல்வதற்கு உதவுதல், கெரில்லாக்களை அழிப்பதற்காக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு அவசியமான படைகளையும் படைக்கலன்களையும் ஒன்றுசேர்த்தல் ஆகியனவும் பணிகளாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அத்துடன் கெரில்லாக்கள், அவர்களது ஆவணங்கள், ஆயத வகைகள், உபகரணங்கள், மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான இதர மூலங்கள் போன்றவற்றைக் கைப்பற்றும் நோக்கில் ரோந்து படைகள் பதுங்கி தாக்குதல்களையும் தேடுதல்களையும் மேற்கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

கெரில்லாக்களைக் கண்டுகொள்ளும் நோக்கிலான வேவுப் பணிகளை நிறைவேற்றுகின்ற போது, ரோந்துகாரரின் மிகவும் பிரசித்திபெற்ற நடவடிக்கை முறையாகக் குறித்த பிரதேசத்தில் தேடுதல் மேற்கொள்ளல் விளங்குகின்றது. அவதானிப்பை மேற்கொள்வதற்காக ரோந்துப் பிரிவினர் ஒளியியல் சாதனங்களையும் தரை இலக்குகளைக் கண்டுகொள்ளக்கூடிய சிறிய பரிமானாத்தைக் கொண்ட றோடர் சாதனங்களையும் பாரியளவில் பயன்படுத்துகின்றார்கள்.

தொடர்வான்....

# நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கவைத்துள்ள சிங்கள பேரினவாத கட்சிகளின் தலைமைகள்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்




**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலே ஒரு நாட்டின் பொருளாதார நெருக்கடி மிக மோசமான சூழ்நிலையில் இருக்கின்ற இந்த காலக்கட்டத்திலே ஒரு தேர்தலை நடத்த வேண்டும் அல்லது ஒரு தீர்வுக்கான விடயங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற பகுதி இருக்க மறுபுறத்திலே சிங்கள நில ஆக்கிரமிப்புக்கள் சிங்கள குடியேற்றங்கள் புத்த விகாரைகள் அமைத்தல் போன்ற விடயங்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த கட்டத்திலே இலங்கையினுடைய அரசியல் நிலவரம் எப்படி சென்றுக் கொண்டிருக்கின்றது.**

**பதில் :** இலங்கை அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னை மீட்டுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது என்பது முதலாவது விடயம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமாயின் இலங்கையினுடைய அந்நிய செலவானி இருப்பு என்பது மிக பெருமளவில் அதிகரிக்கப்பட வேண்டும். அப்படி அதிகரிக்கப்படுவதனூடாகவே தேவையான இறக்குமதிகளை செய்யலாம் என்பதுடன் ஒரு பகுதி கடன்களை கொடுப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும்.

ஆனால் அவ்வளவு தூரத்திற்கான நிதி ஆதாரங்கள் இவர்களிடம் இல்லை என்பது முதலாவது பிரச்சனை அதாவது உள்நாட்டுக்கு வர கூடிய சுற்றுலா பயணிகளின் விகிதாசாரம் உயர்வடையவில்லை. அதே போல தேயிலை ஏற்றுமதி இன்னும் உயர்வடையவில்லை. இப்பொழுது தான் வெளிநாட்டிற்கு சொற்பமான அளவில் இங்கிருந்து வேலைவாய்ப்பு தேடி சென்றிருக்கின்றார்கள். ஆகவே வெளிநாட்டு செலவானி எல்லாம் நாட்டுக்குள் எப்பொழுது வந்து சேரும் என்ற கேள்வி இருக்கின்றது. ஆகவே இவ்வாறு நீங்கள் பார்க்கின்ற பொழுது அரசாங்கம் தனக்கு தேவையான அந்நிய செலவானியை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் இருக்கின்றதா? என்றால் நிச்சயமாக பெருமளவில் இல்லை என்று தான் இருக்கின்றது. இப்பொழுது அவர்கள் சர்வதேச நாணயநிதியத்திடம் இருந்து கடன்களை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளை கடந்த ஆறுமாதமாக அது சம்மந்தமாக பேசி வருகின்றார்கள். பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. இந்த பேச்சுவார்த்தைகளில் கூடுதலாக இந்த பரிஷ் கிளப் என்று சொல்ல கூடிய இவர்கள் வாடகைக்கு அமர்த்தி இருக்கின்ற அந்த குழு தான் இந்த விடயங்களை கையாளுகின்றது. ஆனாலும் அவர்கள் கையாண்டு போட இன்னும் முடிவுக்கு வரவில்லை ஏன் என்று சொன்னாள். அவர்கள் ஊடாக கொடுக்கப்படாத அதாவது வந்து சர்வதேச நாணய நிதியம் கொடுக்கின்ற பணத்தை இலங்கை அரசாங்கம் தனது இறக்குமதி மற்றும் டபுள் எம் என் போன்றவற்றுக்கு பயன்படுத்தலாமே தவிர அவர்கள் வெளிநாட்டு கடனை கொடுப்பதற்கு பயன்படுத்த முடியாது. ஆனால் இவர்கள் வெளிநாட்டு கடன்கள் பல கொடுக்க வேண்டி இருக்கின்றது. அது தான் அவர்களுக்கு பாரிய பிரச்சனை

ஆகவே சீனா.இந்தியா.ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இவர்கள் கொடுக்க வேண்டிய கடன்களை ஓரிரு வருடங்கள் பின்னாள் தள்ளி கொடுப்பதற்கான சில உடன்பாடுகள் எட்டப்பட வேண்டும். அப்படி எட்டப்பட்டாள் மாத்திரமே சர்வதேச நாணயநிதியம் அவர்களுக்கான கடன்களை கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கின்றது. ஆனால் இந்த நிமிடம் வரை இந்த மூன்று நாடுகளும் இவர்களுடைய கடன்கள் தொடர்பாக அவற்றை கொஞ்சம் பின்தள்ளி வைப்பதற்கான ஏற்பாடுகளுக்கான உறுதி மொழிகளை யாரும் கொடுக்கவில்லை என்பது தான் இப்பொழுது இருக்க கூடிய நிலவரம். இந்த நிலவரத்தில் ஐ.எம்.எப் இருந்து இவர்கள் கடன்களை உடனே எதிர்பார்க்க முடியாது.

ஆகவே இந்த வருஷம் இவர்களுக்கு எதிர்பார்க்கின்ற கடன்கள் கிடைக்காது. இவர்கள் எதிர்பார்க்கின்ற வெளிநாட்டு நாணயங்கள் தேவையான அளவுக்கு உள்ளுக்கு வந்து சேராது. ஆகவே பொருளாதார ரீதியில் இவர்கள் மென்மேலும் முன்னோக்கி நகர வேண்டுமாக இருந்தால் அந்த நகர்வுகள் இப்பொழுது இயலாத ஒரு கட்டத்திற்கு இருக்கின்றது என்பது தான் என்னுடைய கருத்து. ஆகவே இந்த ஒரு நிலையில் எதிர் கட்சிகளை பொறுத்த வரையில் தேர்தலை வைக்க வேண்டும். அவர்கள் முக்கியமாக பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும். என்று கூறுகின்றார்கள். அதே போல உள்ளூராட்சி சபைகள் வருகின்ற பெப்ரவரி மாதத்துடன் முடிகின்ற காரணத்தினால் அந்த தேர்தல்கள் வைக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றார்கள். தேர்தல் வைக்கப்பட வேண்டும் என்பது நிச்சயமாக ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள யாரும் தேர்தலை வைக்கும் படி தான் கூறுவார்கள். ஆனால் இப்பொழுது இருக்க கூடிய ஜனாதிபதி தேர்தலை வைத்தால் ஜனாதிபதியினுடைய ஐக்கிய தேசிய கட்சியோ அல்லது பொது ஜன பெர முனவோ இப்பொழுது இருக்கின்ற ஆசனங்களையும் இழந்து போவார்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு இப்பொழுது தேர்தலை வைக்க வேண்டிய ஆர்வம் அக்கறை என்பது இல்லை என்பதும் அவற்றை ஒத்திவைக்கவுமே விரும்புகின்றார்கள். ஆனால் இலங்கையில் இருக்க கூடிய உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஒரு முறை மாத்திரமே தேர்தல்களை தள்ளி வைக்க முடியும். அது ஏற்கனவே தள்ளி வைக்கப்பட்டு விட்டது. இனி வருகின்ற பெப்ரவரி மாதத்திற்கு முன்பு தேர்தலை நடத்த வேண்டும் என்கின்ற தேவை இருக்கின்றது. அவ்வாறு இல்லாவிட்டால் பாராளுமன்றததில் ஒரு சட்ட மூலத்தை கொண்டு வந்து மீண்டும் இந்த உள்ளூராட்சி தேர்தலை தள்ளி வைப்பதற்கான அனுமதியை அவர்கள் பாராளுமன்றத்தினூடாக பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை செய்வார்களா என்பதனை நாங்கள் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

பொது ஜன பெர முன விற்கு பாராளுமன்றத்தில் அதிகபடியான பெரும்பான்மை இருக்கின்றது. ஆகவே அந்த வகையில் அவர்கள் அந்த சட்ட மூலத்தை கொண்டு வருவதற்கான முழு சாத்தியபாடுகளும் இருக்கின்றன. ஆகவே எதிர் கட்சிகள் இதற்கு எதிரான போராட்டங்களை நடத்தினாலும் கூட இன்று இருக்கின்ற நிலையில் விவசாயிகளுக்கு உரம் பற்றாக்குறை இருக்கின்றது. அதே போல மருந்துகள் தட்டுப்பாடு இருக்கின்றது. பொருளாதார ரீதியான பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றது. அவ்வாறான சூழ்நிலையில் தேர்தலுக்கு பல நூறு கோடிகளை தேர்தலுக்கு செலவு செய்ய முடியுமா? என்ற ஒரு கேள்வியும் இருக்கின்றது. ஆகவே அந்த வகையில் இது எவ்வளவு தூரம் இலங்கை அரசாங்கம் இந்த தேர்தல்களை நடாத்தும் என்பது கேள்வி குறி நிச்சயமாக பாராளுமன்ற தேர்தலை நடாத்தாது ஏனென்றால் பொது ஜன பெர முன இப்பொழுது பெரும்பான்மையை கொண்டிருக்கின்றது. அவர்கள் இன்னும் 2அரை வருடங்களுக்கு மேல் இந்த ஆட்சியை கொண்டு நடாத்த முடியும்.

ஆகவே அந்த வகையில் சில சமயங்களில் பொது ஜன பெர முன ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக அல்லது அவரை கவிழ்ப்பதற்கு திட்டங்கள் தீட்டினாலோ அதற்கான முயற்சிகளை மேற்கொண்டாலோ ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தை கலைப்பதற்கான சில முயற்சிகளை வருகின்ற வருடத்தில் சில சமயம் மேற்கொள்ள முடியும். அது அந்த தேவை ஏற்படுமா? என்பது தான் முதலாவது கேள்வி என்னை பொறுத்தவரையில் பொது ஜன பெர முன தொடர்ந்து அடுத்த 2அரை வருடத்திற்கு தாங்கள் இருப்பதை விரும்புவார்கள். அதே போல ஜனாதிபதியும் தான் தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும் என்று விரும்புவார். அந்த அடிப்படையில் இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வார்கள் என்று தான் நான் எதிர்பார்க்கின்றேன் தவிர பாராளுமன்ற தேர்தலுக்கு போகின்ற ஏற்பாடுகள் குறைவு மாறாக மக்கள் பெருமளவு போராட்டத்தில் இறங்கி நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக சீரழிந்து விட்டது. எங்களுக்கு சாப்பாட்டுக்கு வழி இல்லை என்ற ஒரு நிலவரம். நவம்பர்.டிசம்பர் மாதங்களில் உருவாகுமாக இருந்தால் சில சமயம் ஒட்டு மொத்தமான பாராளுமன்றம் ஜனாதிபதி எல்லாருமே தண்டிக்கப்பட வேண்டிய சூழ்நிலை வரலாம். ஆகவே எவ்வளவு தூரம் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்த பொருளாதார சிக்கல்களில் இருந்து. நாட்டை விடுவிக்கப்போகின்றார். எவ்வளவு தூரம் மக்களுக்கு ஒரு நிம்மதியான நிலைமைகளை ஏற்படுத்தி கொடுக்கப்போகின்றார். எவ்வளவு தூரம் இந்த விவசாயம் மீன் பிடி போன்றதற்கான எரிபொருள்கள் உரம் போன்றவற்றை பெற்றுக்கொடுக்கப்போகின்றார். போன்ற பல்வேறுபட்ட விடயங்களில் இந்த அரசாங்கத்தினுடைய இருப்பு என்பது தங்கியிருப்பதாக நான் கருதுகின்றேன்.

ஆகவே இது ஒரு மிக மிக ஒரு சிக்கலான சூழ்நிலைக்குள் நாடு போய்க்கொண்டு இருகின்றது. நான் நம்புகின்றேன். இந்த சிக்கலில் இருந்து விடுபடுவது என்பது ஒரு இலகுவான காரியம் அல்ல உண்மையாகவே ஒட்டு மொத்தமாக ஒரு மக்கள் வாக்களித்து சரியான ஒரு கட்சியை தெரிவு செய்வனூடாக குறைந்தபட்சம் சர்வதேச சமூகத்திற்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். இந்த நம்பிக்கை அடிப்படையில் சில விடயங்களை புரிந்து இந்திய அரசாங்கம் சாதிக்க கூடியதாக இருக்கும். ஆகவே நான் நம்புகின்றேன். அவ்வாறான ஒரு தேர்தல் என்பதும் எதிர்காலத்தில் முக்கியமானதாக நான் கருதுகின்றேன்.

இதற்கு மேலாக தமிழ் மக்களை பொறுத்த வரையில் நிச்சயமாக கடந்த 4வருடத்திற்கு மேலாக மாகாணசபை தேர்தல் நடாத்தப்படவில்லை. ஆகவே எங்களைப்பொறுத்த வரையில் உடனடியாக மாகாணசபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதிகாரங்கள் மாகாணசபைக்கு கையளிக்கப்பட வேண்டும். மாகாண சபைக்கென கொடுக்கப்பட்ட முழுமையான அதிகாரங்கள் அது பொலிஸ் அதிகாரங்கள் , காணி அதிகாரங்கள் ஏனைய சகல அதிகாரங்கள் 1987 ஆம் ஆண்டு யூலை மாத அக்கோடிங் பிரகாரம் 13ஆம் திருத்தத்தில் என்ன அதிகாரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டதோ அந்த அதிகாரங்களை குறைந்த பட்சம் வடகிழக்கிற்கு கொடுப்பதனூடாக மாகாணங்கள் தமக்கான அபிவிருத்தியை தாமே மேற்கொள்வதற்கான சில முயற்சிகளை மேற்கொள்ள முடியும். ஆனால் இப்பொழுது அது இல்லாத காரணத்தினால் தான் இந்த காணி பிடித்தல்கள் காணி பரித்தல்கள் புத்த கோயில்களை உருவாக்குதல் போன்ற பல்வேறுப்பட்ட மோசமான நடவடிக்கைகளை அரசாங்கம் செய்து வருகின்றது. அதிலிருந்து தமிழ் மக்களை காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாக இருந்தால் இன்றைய நிலையில் உடனடியாக மாகாணசபை தேர்தல் நடாத்தப்பட வேண்டும். அதற்கு வடகிழக்கு தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்ற பிரதிநிதிகளாக இருக்கலாம் ஏனையோராக இருக்கலாம். அவர்கள் அதற்காக உரத்து குரல் கொடுப்பதற்கான தேவையும் இருப்பதாக தான் கருதுகின்றேன்.

# விடுதலைப்புலிகளின் போராட்டத்தை விற்று பிழைக்கும் தமிழ் அரசியல் கட்சிகள்

வடகிழக்கைப் பொறுத்தவரையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அடாவடி நடவடிக்கைகளை கடந்த காலத்திலும் தற்போதும் மேற்கொண்டு வந்தது தொடர்ச்சியாக செய்து வருகின்றது. இவ் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்துவேட்டைகளும் இடம்பெற்று முடிந்திருக்கின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக சுமந்திரன் மற்றும் சாணக்கியன் போன்றோர் முன்னெடுத்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. பல தடைகளை மீறி இப்போராட்டம் வெற்றியும் பெற்றது. இதில் வேடிக்கை என்னவெனில் சுமந்திரன் அவர்கள் தனக்கு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக்கூறி கடந்த காலங்களில் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பில் வலம் வந்துகொண்டிருந்தார். இவர்கள் மூலமாக இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டால் இலங்கையிலுள்ள மக்களுக்கு பயன் மிக்கதாக இருக்கும்.

இவ்விருவரும் கூறி ஐ.நாவில் மாற்றம் வரும் என்பதை எதிர்பார்க்கவியலாது ஏனெனில் இந்தத் தமிழ்த் தரப்பினர் இலங்கை அரசுடன் மறைமுகமான ஒப்பந்தங்களை வைத்திருப்பதால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இவர்களால் இல்லாமல் செய்ய முடியாது. தமிழ் மக்களை வைத்து பிழைப்பு நடத்தும் தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் மக்களுக்காக உண்ணாவிரதம் இருக்கத் தயாரா?

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இந்தப் போராளிகள் அனைவரும் பல துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர். பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு அல்லல்படுகின்றனர். உண்மையில் இவர்கள் கல்வி கற்று சிறந்த நிலைக்கு வரவேண்டும் என நினைத்திருந்தால் அவர்கள் ஈழ விடுதலைப்போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தியிருக்கமாட்டார்கள். தாமும் எங்காவது தப்பித்துப் போகவே நினைத்திருப்பார்கள். இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் இன்று கல்வி கற்று நல்ல நிலையில் வாழ்வதற்கும், ஏன் இன்று உயிரோடு நடமாடுவதற்கும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் துங்சமடைந்து பொருளாதார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் சிறந்து விளங்குவதற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகள் தான் வித்திட்டார்கள் என்பது உண்மை.

இன்று சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் பேசப்படுகின்றது. இலங்கையில் மாத்திரமல்ல சர்வதேச ரீதியில் தமிழ் மக்கள் பலம் பெறுவதற்கும் இவர்கள் தான் அடிப்படைக் காரணம். இவர்களது போராட்டம் தான் மூலகாரணம். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய ஒரு அமைப்பு. அதில் மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இருக்க முடியாது. ஆனால் இன்று ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 12 வருடங்கள் நிறைவடைந்தும் இந்தப் போராளிகள் கைவிடப்பட்ட நிலையில் வாழ்கின்றார்கள் என்பது தான் மனவேதனையான விடயம். முன்னாள் போராளிகள் என்கின்ற வார்த்தைப் பிரயோகம் பயன்படுத்தக்கூடாது ஏனென்றால் தமிழீழ விடுதலைப்புலிகள் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் தான் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற கட்சிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கிக்கொண்டார்கள்.



ஆகவே இந்தப் போராளிகளது தியாகங்கள் போற்றப்படவேண்டும். அண்மையில் தியாகி திலீபனின் தியாகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் நல்லூரில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது பலரது விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தரப்பினர் அல்லது அமைப்புக்கள் போராளிகளின் நினைவுதினங்களை நடத்தலாம். ஏனைய மாற்றுத் தரப்பினர் இன்று தமது அரசியலை வளர்ப்பதற்காக தமிழ் மக்கள் மத்தியில் வலம் வருவதும், விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவுகூரும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதும், நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதும், குழப்புவதும் என நிலைமை இன்று மாறியுள்ளது. தமிழ் மக்கள் இதற்கு இடம்கொடுக்கக்கூடாது. அவர்கள் மக்கள் மத்தியில் இருந்து விரட்டப்பட வேண்டும். ஆனால் நினைவுநாட்களில் மாத்திரம் தான் குறிப்பிட்ட போராளிகளின் நினைவிடங்கள் பலருக்கும் நினைவே வருகின்றது.

மாவீரர் நினைவுதினங்களை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்த கடந்த காலங்களில் அரசு தடைவிதித்திருந்தது. நல்லாட்சியில் ஓரளவு தடைகள் நீக்கப்பட்டிருந்தாலும் ராஜபக்ஸக்களின் ஆட்சியில் கடுமையான கெடுபிடிகளை வடகிழக்கு மாத்திரமல்ல இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருந்தது. முப்படைகளும் தமிழ் மக்களை கண்காணித்தனர். புலனாய்வாளர்கள் வடகிழக்கெங்கும் அலைந்து திரிந்தனர். இரவிரவாக வடக்கும் கிழக்கும் கண்காணிப்புக்கும் சோதனைக்கும் உள்ளாகும் நிலை இருந்தது. அத்துமீறிய பொலிசாரிகள் செயற்பாடுகளும், கைது நடவடிக்கைகளும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆங்சலி செலுத்தியவர்கள் கூட கைது செய்யப்பட்டனர். வாக்கு மூலங்களை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

விடுதலைப்புலிகள் இந்த மண்ணுக்காகப் போராடியவர்கள். தமிழ் மக்களின் இருப்புக்காக போராடியவர்கள். தமிழ் மக்களின் எதிர்கால சந்ததியினராவது சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் எனப் போராடியவர்கள். எதிர்காலத்தில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தமிழினம் தலைநிமிர்ந்து சுய உரிமையுடன் இந்த மண்ணில் வாழ வேண்டும் என ஆசைப்பட்டு தமது ஆசைகளை நிராசைகளாக்கி தமது இன்னுயிரை நீத்தவர்கள். அவ்வாறானவர்களை தமிழினம் எவ்வாறு கொண்டாடாமல் இருக்க முடியும். அவர்களைப் பற்றிப் பேசாமல் தமிழினம் எவ்வாறு தமது வாழ்வை கடக்க முடியும். ஏனெனில் தமிழினம் இன்று இலங்கையில் உயிருடன் வாழ்வதற்குக் காரணமே அவர்கள் தான். ஈழப்போரின் இறுதிக்கட்டம் வரை தமிழீழ விடுதலைப்புலிகளின் தியாகம் இருந்தது.

மீண்டும் ஓர் ஆயுதப்போராட்டம் எமது நோக்கமல்ல எனினும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகளின் இன்றைய நிலை குறித்து அதிகம் பேசவேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்துப் பேசவேண்டிய தேவை இருக்கிறது. அவர்களுக்கான வாழ்வாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு குறித்துப் பேசவேண்டிய தேவை இருக்கிறது. எல்லாவற்றையும் இழந்து தவிப்பவர்களுக்காக தமிழினம் என்ன செய்தது? இன்று என்ன செய்கின்றது? இன்று அவர்களைத் திரும்பிப் பார்க்கும் தமிழர்கள் எத்தனை பேர்? இன்றைய இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்குள் இவர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எல்லோரும் அல்ல ஒரு சிலரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவர்களது மனநிலை இன்று வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழினத்திற்காகப் போராடிய எமக்கு இன்று தமிழினம் என்ன செய்கின்றது என்கிற கேள்வி வேதனையுடன் வெளிவருகின்றது. அவர்களுக்கு நாம் இன்று செய்யவேண்டிய கடமைகள் நிறைய உண்டு. இனிவரும் காலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுமாகவிருந்தால் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்த் தரப்பினர் இங்கு வந்து அரசியல் ரீதியான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. பொருளாதார ரீதியாகவும் இலங்கை வளர்ச்சியடைய இவர்கள் மூலமாக ஏராளமான கதவுகளும் திறக்கப்படும்.

ஆனால்மக்களுக்குத்தேவையானதைச் செய்ய இலங்கையின் அரசாங்கம் தயாராக இல்லை. கடன்களை வாங்கிக் குவிப்பதும் ஊழல் நிறைந்தவர்களை தன் துணைக்கு வைத்துக்கொண்டு சாக்குப்போக்குக் கூறி வங்குரோத்து அரசியலையே தொடர்ந்தும் செய்து வருகின்றனர். எனவே இந்தப் போராளிகளின் உயிர்த்தியாகங்கள் மதிக்கப்பட வேண்டும். இவர்களை வைத்து பிழைப்பு நடத்துகின்ற செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்கள் இவர்களைப் பொறுப்பெடுக்க வேண்டும். அவதானித்து செயற்படவேண்டும். ஒட்டுமொத்தப் போராளிகளுக்குமான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு, அது உள்ளூர் புலம்பெயர் தரப்பினரால் கண்காணிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு, ஒவ்வொருவருக்கும் என மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு, அவர்களை முறையாக பராமரிப்பதற்கான செயலணி உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் அரசியலுக்குள்ளும் உள்வாங்கப்பட வேண்டும். அதுவே இம் மண்ணுக்காக உயிர்நீத்த எமது போராளிகள் மற்றும் பொது மக்களுக்கு நாம் செய்யும் மிக உயர்ந்த மரியாதையாகவும் அமையும்.

**இரணியன்**

# இலங்கையின் புலனாய்வு கட்டமைப்பு மீட்சி பெறவேண்டும் – இல்லையேல் ஆபத்து

உலக வல்லரசு நாடுகள் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக அந்நாட்டு புலனாய்வுக்கட்டமைப்பை பலப்படுத்தி வைத்திருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் இஸ்ரேல், அமெரிக்கா, ரஷ்யா, ஸ்கொட்லாந்து இப்படி பலம்மிக்க புலனாய்வுநாடுகள் இடம்பெறுகின்றன. வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளும் அந்நாட்டின்புலனாய்வுக்கட்டமைப்பிலேயே தங்கியுள்ளது.

அதேபோன்று இலங்கை நாட்டையும் கூட அவ்வாறான ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவருவதன் ஊடாக உலகளாவிய ரீதியில் தலைசிறந்த ஒரு தீவாக காணப்படுமேஒழியவேறுஎந்தவகையிலும் அமையப்பெறமாட்டாது. உலகநாட்டில் இன்டர்போல், ஸ்கொட்லாந்து பொலிஸ் போன்ற உளவுப்பிரிவுகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. அதிலும் குறிப்பாக அமெரிக்காவைப் பொறுத்தவரையில் 52 மாநிலங்களில் 52 உளவுப்பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இப்படைப்பிரிவுகளின் கோட்வேட் அல்பாபீட்டா என்கின்ற அடிப்படையில் அமைகின்றது. 200 நாடுகளிலும் முதல்தரத்தில் அமெரிக்காவின் CIA இருப்பதுடன் ஸ்கொட்லாந்து பொலிஸ் 24மணிநேர உளவுநடவடிக்கையில் ஒரு விடயத்தை கண்டுபிடித்துக்கொடுக்கிறது. குறிப்பாக 200 நாடுகளிலும் ஆசியப்பிராந்தியத்தில் மாத்திரமே புலனாய்வுக்கட்டமைப்பை மீறி ஜனாதிபதி அதிகாரத்தினை பயன்படுத்துகிறார்கள். இதனால் அந்நாட்டு புலனாய்வாளர்களினால் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. அந்நியநாட்டவர்கள் நாட்டிற்குள் நுழைவதற்கும் வசதியாக அமைகிறது.

இந்தியாவின் புலனாய்வில் தலைசிறந்த புலனாய்வுப்பிரிவாக ரோ செயற்படுகிறது. ரோவினுடைய புலனாய்வுக்கட்டமைப்பையே முறியடித்தவர்கள் தான் விடுதலைப் புலிகள். அல்பாபீட்டா கோட்வரிசையில் விடுதலைப்புலிகளினுடைய புலனாய்வுப் பிரிவினரின் பெயர் டெசி ஆகும். ராஜீவ்காந்தியை கொலைசெய்வதற்காக பயன்படுத்திய குறியீடு கஞ்சிகுடிச்சாறு ஆகும். கஞ்சிகுடிச்சாறு ஓவர் என்பது அவர் படுகொலை செய்யப்பட்டு விட்டார் என்று அர்த்தமாகும்.

அவ்வாறிருக்கின்றபொழுது இலங்கையில் முப்படை அதிகாரங்களையும் தன்னகத்தே வைத்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அதிகாரத்தினை பயன்படுத்தி வெற்றி காண முடியும் என்பது பகற்கனவாகும். நாட்டின் புலனாய்வின் கட்டமைப்பை பலப்படுத்த வேண்டியதன் அவசியம் ஜனாதிபதியின் கையில் தங்கியிருக்கின்றது. அதே நேரம் புலனாய்வுக் கட்டமைப்பின் ஆலோசனையின் படியே ஜனாதிபதியவர்கள் தனது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஜனநாயக நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக புலனாய்வு நடவடிக்கைகளை புலனாய்வுத்துறையினரிடமே கையளிப்பது சிறந்ததொன்றாகும்.

இன்றைய காலகட்டத்தில் புலனாய்வாளர்கள் சுயாதீனமாக செயற்பட முடியாத நிலை இலங்கையில் உள்ளது. புலனாய்வாளர்கள் என்பது மக்களோடு ஒன்றிப்போகின்றவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் வேறு மக்கள் வேறு என பிரிப்பதன் ஊடாக வேவு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது மிகக்கடினமானதொன்றாகும்.

ஒசாமா பின்லேடனைப் பிடிப்பதற்கு 10 வருடங்களுக்கு முன்பதாகவே அமெரிக்க அரசினால் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. அதனூடாக பாகிஸ்தானுக்கு சென்று வெற்றிகரமாக தாக்குதலை நடாத்தி திரும்பினர் அமெரிக்க புலனாய்வுப்படையினர்.



உதாரணமாக சனல் 4 தொலைக்காட்சியினர் இலங்கைக்கு வந்தபொழுது இலங்கையரசு கையாண்ட விதம் தவறானதொன்றாகும். இதன் காரணமாக கெலம் மக்கரே தன்னுடைய நிகழ்ச்சி நிரல் தொடர்பாக கூறு கையில், இலங்கை தொடர்பில் தான் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படவில்லையென சனல் 4 தொலைக்காட்சியின் சுயாதீன ஊடகவியலாளரும், போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தின் இயக்குனருமான கெலும் மக்ரே தெரிவித்தார்.

ஒரு ஊடகவியலாளன் தனது கடமையை செய்ய வேண்டும். இலங்கை பிரச்சினையில் நான் செய்து வருவது சரியானதே என்றார். இலங்கையின் இறுதிக்கட்ட போரில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் அவர் இயக்கிய போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படம் இலங்கை உட்பட உலகம் முழுவதும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பான செய்தி சேகரிப்புக்காக இலங்கை வந்த மக்ரே, விமான நிலையத்தில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை எதிர்கொண்டதுடன் வடபகுதிக்கு செல்ல அவர் மேற்கொண்ட முயற்சியின் போதும் இவ்வாறான எதிர்ப்பை எதிர் கொண்டார். கெலும் மக்ரே விடுதலைப்புலிகளிடம் சம்பளத்தை பெற்று வருவதாக சில ஆர்ப்பாட்டகாரர்கள் குற்றம் சுமத்தினர்.

இதற்கு பதிலளித்த மக்ரே இது ஆதாரமற்றதும் அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டு எனக் குறிப்பிட்டார். நான் முதலாவது காணொளி ஆவணப்படத்தை இலங்கையில் தயாரித்தேன். அதன் பின்னர் சில தகவல்களையும் காணொளி காட்சிகளையும் பெற்றேன் என்றார். இந்த காணொளிகள் உண்மையானது என்பதற்கு என்ன உத்தரவாதம் என எழுப்பட்ட கேள்விக்கு ஒன்றுக்கு பதிலளித்துள்ள மக்ரே, அது ஒளிபரப்படும் முன்னர் அதன் நம்பகத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின்னரே ஒளிபரப்பட்டது எனக் கூறினார்.

எனது இறுதி காணொளி ஆவணப்படம் பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர் தயாராகியது. எனினும், சோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் இது வெளியிடப்படவில்லை. ஒரு ஊடகவியலாளன் என்ற முறையில் எனது கடமைகளை முன்னெடுக்க இலங்கை வருவதற்கான வீசா வழங்கப்பட்டது. எனினும் வருகை தந்த நாள் முதல் புலனாய்வுதுறை மூலம் எனது நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. இது ஏமாற்றத்தை அளிக்கின்றது எனவும் கெலும் மக்ரே குறிப்பிட்டார்.சனல்4 தொலைக்காட்சி நிறுவனத்துடன் இணைந்து இலங்கைக்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவோரைக் குறிவைக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இவ்வாறான கருத்துக்களையோ இவ்வாறான செயற்பாடுகளையோ கூறுவதற்கு கெலம் மக்கரேவிற்கு வாய்ப்பளித்ததும் இந்த அரசாங்கமே. ஒரு நாட்டின் புலனாய்வு என்பது தமது செயற்பாடுகளை இரகசியமான முறையில் செயற்படுத்தியிருக்க வேண்டுமாயின் அவர்களோடு பல ஊடகவியலாளர்களையும் இணைத்திருக்கலாம் அதை விடுத்து ஆர்ப்பாட்டங்கள் செய்வது எந்தவித பயனும் அற்றது. இன்று சர்வதேச அளவில் இலங்கை தொடர்பாக பேசுவதும் இன்னும் பல சர்ச்சைகள் இருக்கின்றன. புலனாய்வினரின் செயற்பாடுகளை புலனாய்வினரிடமே விட்டுவிடுவதன் மூலம் அவர்களுடைய நடவடிக்கைகளை அவர்கள் திறம்படச் செய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் போராட்டத்தை தோற்கடித்ததற்கு உலக நாடுகளின் பங்களிப்பு இருந்தாலும் கூட புலனாய்வுகளின் ஊடுருவலுக்கு அமெரிக்காவே மிகவும் உந்துசக்தியாக இருந்தது. இன்றைய காலகட்டத்தினை பொறுத்தவரையில் போராட்டம் என்பது இனி தலைதூக்குவதற்கு வாய்ப்புக்கள் குறைவு என்றே கூறலாம். இவ்வாறிருக்கின்றபொழுது இலங்கையரசாங்கம் புலனாய்வு கட்டமைப்பினரை வளர்த்தெடுக்கும் ஒரு கட்டாயநிலைக்குள்தள்ளப்பட்டிருக்கின்றது. அவ்வாறு புலனாய்வுப்பிரிவினரை கட்டியெழுப்பாத பட்சத்தில் இந்த நாடு அமெரிக்காவின் காலணித்துவ நாடாகவோ அல்லது இந்தியா, சீனா போன்ற நாடுகளின் காலணித்துவ நாடாகவோ மாற்றம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

உலக வல்லரசுகள் எல்லாம் தமது புலனாய்வு நடவடிக்கைகளை கட்டியெழுப்புவதில் குறிக்கோளாக இருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில்பதவிஆசையில்நாட்டை விற்கும் அளவிற்கு செயற்பட்டுவருகிறது என்பது மனவேதனைக்குரியதாகும். தற்பொழுது தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற அனைத்து இடங்களிலும் இலங்கை புலனாய்வாளர்களை அமர்த்தினாலும் கூட அவர்களினுடைய செயற்பாடுகள் வெற்றியளிக்காத நிலையே காணப்படுகின்றது. காரணம் சுயாதீனமாக புலனாய்வாளர்களினை செயற்படவிடாமையே காரணமாகும்.

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எதிர்காலத்தில் புலிகள் தலை தூக்குவதற்கோ அன்றில் புரட்சி ஒன்று எழுவதற்கோ இடமளிக்கப்போவதில்லை என திடகாத்திரமாக தெரிவித்துள்ளனர். இதேநேரம் புலம்பெயர் நாடுகளில் புலிகளின் செயற்பாடுகள் இலங்கையின் இறைமைக்கு குந்தகமாகவே அமைகின்றது என்றும் அச்செயற்பாடுகள் இலங்கையின் நற்பெயருக்கு ஊறு விளைவிக்கின்றது எனவும் அரசு வெளிப்படையாகவே குற்றஞ்சுமத்தி வருகின்றது. இந்நிலையில் ஜெனிவாவில் இலங்கைப் புலனாய்வுத் துறையினர், கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஜெனிவா சென்றடைந்துள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

இலங்கையிலிருந்து சென்றுள்ள அணியுடன் ஐரோப்பிய நாடுகளில் நிலைகொண்டுள்ள புலனாய்வு முகவர்களும் இணைந்துள்ளதாக கூறப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து சென்றனர். இவர்களில் பலர் புலிகளுக்கு நிதி வழங்கியவர்கள் என்பதும் புலிகளின் ஊர்வலங்கள் மற்றும் செயற்பாடுகளில் பங்கெடுத்தவர்கள் என்பதும் தெட்டத்தெளிவாக தெரிந்திருந்தும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் 2009 மே இற்கு பின்னர் புலம்பெயர் தேசத்தில் செயற்படுகின்றவர்கள் இனங்காணப்பட்டு அவர்களது விபரம் நாட்டுக்குள் நுழைய முடியாதவர்களுக்கான கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறானவர்கள் சிலர் விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்கள் குறிப்பிடத்தக்களவில் பதிவாகியுள்ளது. இந்நிலையில் ஜெனிவாவில் களமிறங்கியுள்ள புலனாய்வாளர்கள் நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றவர்களை துல்லியமாக இனங்கண்டு அவர்கள் மீதான அதி உச்ச நடவடிக்கைக்கு தயாராகலாம் என நம்பப்படுகின்றது. புலம்பெயர் புலிகள் பல பிரிவுகளாக பிளவுபட்டுள்ளனர். இவ்வாறு பிளவுபட்டுள்ள அநேகர் இலங்கை அரசுடன் ஏதோ ஒரு வழியில் தொடர்புகளை பேணி வருகின்றனர். இவர்கள் தமது இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக மறுதரப்பை காட்டிக்கொடுத்தும் வருகின்றனர்.

இவ்வாறு இலங்கைப் புலனாய்வினரின் செயற்பாடுகள் இருந்தாலும் பெரியளவில் மாற்றம் ஒன்றை கொண்டுவருவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. எமது நாடு தொடர்பாகவும், பாதுகாப்பு சார்பாகவும் உரிய நடவடிக்கைளை எடுக்கவேண்டுமாயின் புலனாய்வுக் கட்டமைப்பினரை வளர்த்தெடுக்க வேண்டிய நிலைப்பாட்டிற்குள் மஹிந்த அரசாங்கம் காணப்படுகின்றது.

பல்வேறு புலனாய்வு அமைப்புக்கள் இலங்கையில் செயற்பட்டு வருகின்றன. இவர்களது தற்போதைய செயற்பாடுகள் நூற்றுக்கு 35வீதமாகவே காணப்படுகின்றது. விடுதலைப்புலிகளின் கட்டமைப்பு வெளிநாடுகளில் யுத்தத்தின் பின்னர் இயங்குவதற்கு காரணமாக அமைந்தவர்களும் இலங்கையரசே எனலாம். இனிவரும் காலங்களிலாவது புலனாய்வுக்கட்டமைப்பை கட்டியெழுப்புவதன் ஊடாகவும், அவர்களின் கையில் அதிகாரங்களை வழங்குவதன் ஊடாகவும் சிறந்ததொரு புலனாய்வுக்கட்டமைப்பை உருவாக்கலாம். அது மட்டுமன்றி அந்நியருடைய காலணித்துவ நாடாக மாற்றம் பெறுவதையும் தவிர்க்கலாம்.

**சுழியோடி**

# வடகிழக்கில் தொடரும் சிங்களக் குடியேற்றம் மௌனம் காக்கின்றதா? – தமிழ் தரப்பு





இலங்கைத் தீவினில் வாழும் சிறுபான்மை இனமக்களின் இருப்புக்களை தக்கவைத்துக்கொள்வதற்காக மக்கள் பெரும் முயற்சி எடுத்து வருகின்ற தன்மையினை ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், பேரணிகள், போன்றவற்றின் ஊடாகத் தெரிந்து கொள்ளலாம். தமிழ்மக்கள் ஒட்டுமொத்தமாக அணிதிரண்டு வட மாகாணசபையை தமிழ்த் தலைமைகளிடம் கொடுத்திருந்தாலும் மக்களுக்காக வழங்கிய வாக்குறுதிகளை தமிழ் அரசியல் தரப்பு இன்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறதே தவிர அவற்றை நிறைவேற்றமுடியாத கையாலாகாத நிலையில் இருக்கின்றது என்பது மனவருந்தத் தக்கது.

இன்று பெருமளவிலான தமிழ்மக்கள் கொன்றொழிக்கப்பட்டும், காணாமல் போயுமுள்ள நிலையில் இருக்கும் சிறியளவிலான எண்ணிக்கையையுடைய மக்கள் பரம்பல் இன்று சுருங்கிவருகின்றது. திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கூடாக இலங்கை அரசு தமிழ்மக்களின் பூர்வீகக் காணிகளை அபகரித்து வருகின்றது. படைகளின் தேவைக்காகவும், சிங்களக் குடியேற்றங்களுக்காகவும் என இரண்டு விதமான காரணிகளினடிப்படையில் காணி அபகரிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனால் இன்று மக்கள் தமது சொந்தக்காணிகளுக்கு உரிய ஆதாரங்களைப் பெற்றுக்கொள்வதில் அதிக அக்கறை காட்டுவதை பிரதேச செயலகங்களில் தினமும் நிற்கும் மக்களைக் கொண்டு நாம் அறியலாம்.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவு, உடை, உறையுள் என்பன உள்ளடங்குகின்றன. இவற்றில் உணவு, உடை என்பதற்கு அப்பால் உறையுள் என்ற விடயம் நிலத்துடனும், மனித வாழ்வியலுடனும் பின்னிப் பிணைந்தது. நிலமின்றில் நாகரீகமில்லை. உலகில் தோன்றி நாகரீகங்கள், பண்பாடுகள் எல்லாம் ஒரு நிலத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருப்பதை வரலாறு நமக்குணர்த்துகின்றது. சிந்துவெளி நாகரீகம், மொஹஞ்சதாரோ நாகரீகம், ஹரப்பா நாகரீகமாக இருந்தாலும் சரி கிரேக்க நாகரீகம், ரோம நாகரீகமாக இருந்தாலும் சரி அந்நாகரீகங்களெல்லம் அவை தோன்றிய நிலங்களின் பெயர்களை அடிப்படையாக வைத்தே இன்று வரை அழைக்கப்படுகின்றன. ஆகவே நிலத்துக்கும், மனிதனுக்கும் இடையிலான சம்மந்தம் என்றும் பிரிக்கமுடியாதது. நிலத்தினை அடிப்படையாகக் கொண்டே ஒரு இனத்தின் மொழி, கலாச்சாரம், பண்பாடு என்பன தீர்மானிக்கப்படுகிறது. உருவாகிறது. ஆகவே ஒரு மக்கள் கூட்டத்தின் நிலத்தின் மீதான உரிமையைப் பறிப்பதென்பது அவர்களது வாழும் உரிமையைப் பறிப்பதற்குச் சமமாகும். அதுவே இன்று இலங்கையில் நடைபெற்று வருகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் நில அபகரிப்பு என்பது குறுகியகால செயற்பாடு அல்ல. மிக நீண்ட காலமாக நிலஅபகரிப்பு தமிழர் மத்தியில் நடைபெற்று வருகின்றது. நிலப்பரம்பலை உடைத்து மக்களை சிறுசிறு குழுமங்களாகப் பிரித்துவைத்திருக்கும் நிலைப்பாட்டை இலங்கைப் புறவுருவப்படத்தில் தமிழ்மக்களின் இன்றைய பரம்பலைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் 2500 வருடங்களுக்கும் மேலான சரித்திரத்தைக் கொண்டுள்ளனர். தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகமாகும். சிங்களவர்களுக்கு சார்பாக எழுதப்பட்ட மகாவம்சமோ அல்லது இலங்கைத் தமிழரின் சரித்திரத்தை விபரிக்கும் எந்த ஒரு வரலாற்று நூலுமோ கிழக்கிலங்கையையோ, வன்னிப் பகுதியையோ அல்லது யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தையோ எந்த ஒரு சிங்கள அரசனும் ஆண்டதாக கூறவில்லை.

குறிப்பிட்ட ஒரு சமூகக் குழுமம் தன்னை ஒரு தேசிய இனமாகப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்கு அக்குழுமத்திற்குத் தனித்துவமான மொழி, வரலாறு, இலக்கியம், கலை கலாசார பின்னணி என்பவற்றுடன் தொடர்ச்சியான நிலப்பரப்பும் அந் நிலப்பரப்புடன் வரலாற்றுத் தொடர்பும் இருத்தல் வேண்டும் என்று மேற்குலக இனவியல் வரலாற்றாசிரியர்கள் வரையறுத்துள்ளனர். இதிலிருந்தே தாயகக் கோட்பாடு உருவாகியது. இக்கோட்பாட்டை உடைத்து தமிழர்களை சிறுமைப்படுத்தி இனப்பரம்பலை சீர்குலைக்கவே இணைந்திருந்த வடகிழக்கின் எல்லைக் கிராமமான மணலாற்றை சிங்களக்கிராமமாக 1980இல் இலங்கையரசு முதன் முதலில் மாற்றியது. ஆனால் 1949 முதல் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கும் முயற்சியில் இலங்கையரசு முனைப்புக்காட்டி வந்தது.

தமிழர் தாயகத்தில் கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்ட முதலாவது பாரிய சிங்களக் குடியேற்றம் 1949 கல்லோயாக் குடியேற்றமாகும். இதனை ஆரம்பித்து வைத்தவர் இலங்கையின் முதற் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க. அடுத்து 1956முதல் ஏற்பட்ட இனக்கலவரங்கள் தமிழர்களின் நிலங்களை துவம்சம் செய்தது. 1956 ஐத் தொடர்ந்து 1958, 1977, 1978, 1981, 1983 என தமிழர் தாயகத்திலும் தென்னிலங்கையிலும் மலையகப் பகுதியிலும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கலவரங்கள் தமிழர்களுக்கு உரிமையான நிலங்களையும் சொத்துக்களையும் அபகரிப்பதற்காக இன அழிப்பை நோக்காகக் கொண்டு ஆயுதப்படைகளின் உதவியுடன் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டன. எல்லைக் கிராமங்களிலும் சிங்களவர் மத்தியிலும் வாழ்ந்த தமிழர்கள் இக்கலவரங்களின் போது நடந்த படுகொலைகளைத் தொடர்ந்து வெளியேற்றப்பட்டார்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

1983 கலவரத்தை தொடர்ந்து தமிழர்கள் பெருமளவில் நாட்டைவிட்டு வெளியேறி மேற்கு நாடுகளுக்கு புகலிடம் தேடிச் சென்றனர். 1983 இல் இலங்கையின் தலைநகரில் தொடங்கப்பட்ட தமிழர்களுக்கெதிரான வன்முறையில் 3000 இற்கும் அதிகமான தமிழர்கள் உயிரோடு எரித்தும் வெட்டியும் கொல்லப்பட்டார்கள். பெண்கள் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்டார்கள். இக்கலவரம் மலையகத்திற்கும் அனுராதபுரம் பொல நறுவை முதலான தமிழர் பிரதேசங்களுக்கும் பரவியது. இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றியபோது அனுராதபுரத்தில் தமிழர்களே பெரும்பான்மையாக இருந்தனர். 1983 கலவரத்துடன் தமிழர்கள் முற்றாகவே அனுராதபுரத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இலங்கை சுதந்திரமடைந்த ஒரு சில ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர்களின் சதவீதம் 3 மடங்கால் அதிகரித்தது. 1961 இல் 7002 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 4500 சதுர கிலோமீற்றர் நிலமானது பிரித்தெடுக்கப்பட்டு அம்பாறை என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது. 15000 சிங்களக் குடும்பங்கள் புதிதாக உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். 2007 இல் உள்ள தரவுகளின்படி அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகையில் 60 சதவீதமாக இருந்த தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் 30 சதவீதமான நிலத்தையே உரிமையாகக் கொண்டிருக்க சனத்தொகையில் 30 சதவீதமான சிங்களவர்கள் மாவட்டத்தின் 70 சதவீதமான நிலத்தை உரிமையாகக் கொண்டிருக்கின்றமையக் காணலாம். இப்படியாக 1949 இல் தொடங்கி 2014 இன்று வரை பார்க்கையில் இலங்கைத் தீவில் தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்யுமளவுக்கு (Ethnic Cleaning) நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் ஒரு புறம் வடகிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழினம் 1949 இலிருந்து தனது நிலத்தை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும் இராணுவ ஆக்கிரமிப்பாலும் படிப்படியாக இழந்து வர மறுபுறம் ஏறத்தாழ 250 வருடங்களாக அரை அடிமைகளாக வாழும் மலையகத் தமிழினம் அபிவிருத்தி திட்டங்கள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களாலும் திட்டமிட்ட இனக் கலவரங்களாலும் தமது பூர்வீக நிலத்தின் மீதான இருப்பையும் உரிமையும் இழந்து வருகிறது. கிழக்கு மாகாணத்தில் இன்று தமிழினம் தனது இருப்பை நிலத்தின் மீதான உரிமையை முழுமையாக இழந்துள்ளது. கிழக்கில் தமிழர்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

2009 மே மாதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுத பலம் அழிக்கப்பட்ட பின்னர் வடபகுதியில் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் சிங்கள இராணுவத்தாலும் சிங்களக் குடியேற்றத்தாலும் தொடர்ச்சியாகப் பல்வேறு வழிகளில் சூறையாடப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 29 ஆயிரத்து 311 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. இதேபோல் யாழ் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கில் 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் வவுனியா மாவட்டத்தில் 110 ஏக்கர் நிலமும் அபகரிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுள முனை ஆண்டான்குளத்தில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 94 ஏக்கர், திருக்கோணம்பட்டி 26 ஏக்கர் வன்னிசியார் வயல்வெளி 5 ஏக்கர், விண்ணன்கம் வயல்வெளி 18 ஏக்கர், மருதடிக்குளவழி 48 ஏக்கர், அத்தான் கடவை 124 ஏக்கர், ஆலடிக்குளம் 74 ஏக்கர், சாமிப்பிலக்கண்டல் 143 ஏக்கர் ஈரக்கொழுந்தன் வெளி 71 ஏக்கர், படலைக்கல்லு 48 ஏக்கர் , நித்தகைக்குளம் 48 ஏக்கர் , செம்மலப்புளியமுனை 276 ஏக்கர் , நீராவி 163 ஏக்கர் , உலாத்துவெளி 15 ஏக்கர் , நீராவிவயல் வெளி 20 ஏக்கர் , வட்டுவன் 10 ஏக்கர் ஆகிய தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களுக்காக அபகரிக்கப்பட்டுள்ளன .

11ஆம் பக்கம் பார்க்க...

**நெற்றிபொறியன்**



# பிராந்திய செய்திகள்




## பருப்பு மற்றும் சீனி என்பனவற்றின் விலை குறைப்பு!

கொழும்பு - புறக்கோட்டை மொத்த சந்தையில் பருப்பு மற்றும் சீனி என்பனவற்றின் விலை குறைவடைந்துள்ளது.

இதற்கமைய, கடந்த வாரம் 400 ரூபாயாக இருந்த ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 25 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, பருப்பு 375 ரூபாயாக குறைந்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 15 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 235 ரூபா என்ற அடிப்படையில் மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.



## நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் பலர் பாதிப்பு

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் 1,296 குடும்பங்களைச் சேர்ந்த 4,929 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பல மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 31 குடும்பங்களைச் சேர்ந்த 116 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.



## பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் கிடைத்த வாய்ப்பு

பாராளுமன்ற விவாதங்களை காண பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் நாட்களில் பாடசாலை மாணவர்களுக்கு பாராளுமன்றத்திற்கு வருகை தருவதற்கும் விவாதங்களை பார்வையிடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அனுமதியளித்துள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ முன்வைத்த பிரேரணைக்கே இவ்வாறு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, பாராளுமன்ற அலுவலகத்தில் உள்ள பொதுக் கேலரியில் இருந்து பாராளுமன்ற விவாதங்களை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொவிட் நிலைமை மற்றும் பாதுகாப்புக் காரணங்களால், கடந்த செப்டம்பர் 20ஆம் திகதி முதல் பாராளுமன்றத்துக்குச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட போதிலும், பாராளுமன்ற அமர்வு நாட்களில் அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

## இலங்கையில் பணவீக்கம் உச்சநிலையை அடைந்துள்ளது

பணவீக்கம் உச்சநிலையை அடைகின்ற அதேவேளை இந்த மாதம் பொருட்களின் விலைகள் குறைவடையலாம் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதியை சரிசெய்ய மேலும் நடவடிக்கைகள் வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பணவீக்கம் செப்டம்பர் மாதம் 69.8 வீதமாக அதிகரித்துள்ளது என்றும் இது இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத நிதி நெருக்கடியை காட்டி நிற்பதாகவும் கூறியுள்ளார்.

டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் விலை குறையும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளையில், பணவீக்கத்தைக் குறைக்க வங்கிகள் வீதங்களை உயர்வாக வைத்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களை இலங்கை கடந்த மாதம் ஆரம்பித்துள்ள அதேவேளை இந்த ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதிய உதவிகள் கிடைக்கும் என்றும் அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியதிற்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு ஏற்ப, அதிக வரிகள் மற்றும் அரச நிறுவனங்களின் பரந்த சீர்திருத்தங்களை உள்ளடகி 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் நவம்பர் நடுப்பகுதியில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## திடீரென தீப்பற்றி எரிந்த வேன்! யாழில் சம்பவம்!



மாவிட்டபுரத்தில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் வேன் வாகனம் ஒன்று தீயில் எரிந்து முற்றாகச் சேதமடைந்துள்ளது.

பயணித்துக் கொண்டிருந்த வேன் திடீரென தீப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு 9 மணியளவில் சாரதி மட்டும் பயணித்த போது இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கின்ற போதும் சரியான காரணம் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து காங்கேசன்துறை கடற்படை முகாமிலிருந்து தீயணைப்பு வாகனம் கொண்டு வரப்பட்டு தீயை அணைத்த போதும் வேன் முற்றாகச் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ் பேருந்துகளில் இளம் பெண்களிடம் கைவரிசை!

யாழ்ப்பாணத்தில் பேருந்துகளில் பயணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசிகளை அபகரிக்கும் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரிடமிருந்து 9 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அச்சுவேலி, நீர்வேலி, சுன்னாகம், பலாலி உள்ளிட்ட இடங்களில் பேருந்துகளில் பயணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசிகளை சந்தேக நபர் அபகரித்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸின் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அலைபேசிகளை தவறவிட்ட பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை வழங்கியவர்கள் அலைபேசியை அடையாளம் காட்டுமாறு மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# சினிமா துளிகள்



## நடிகை பார்வதியின் வீட்டில் திருட்டு போன விலையுர்ந்த பொருட்கள்!



தமிழ் சினிமாவின் மிகவும் பிரபலமான நடிகையாக திகழ்ந்து வருபவர் நடிகை பார்வதி நாயர்.

தமிழில் அஜித் நடித்த என்னை அறிந்தால் திரைப்படத்தின் மூலம் அறிமுகமான நடிகை பார்வதி. தொடர்ந்து தமிழ் திரைப்படங்களில் நடித்து பிரபலமாகினார்.

இந்நிலையில் தற்போது சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள நடிகை பார்வதி நாயரின் வீட்டில் ரூ. 6 லட்சம் மற்றும் ரூ. 3 லட்சம் மதியுள்ள விலையுர்ந்த 2 கைக்கடிகாரங்கள் திருட்டு போனதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் ரூ. 50.000 மதியுள்ள லாப்டாப். செல்போனும் திருடப்பட்டுள்ளதாகவும். தற்போது கொள்ளை சம்பவம் குறித்து பொலீசார் விசாரணை நடந்தி வருவதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

## 23 வயதான இளம் பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்ட நடிகர் பப்லு!

**பப்லு பிரித்விராஜ்**

திரைப்படங்கள் மற்றும் சீரியல் என மக்களிடையே பிரபலமான நடிகராக திகழ்ந்து வருபவர் நடிகர் பப்லு பிரித்விராஜ்.

சில தினங்களுக்கு முன்பு சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நடிகர் பப்லு. இப்போதும் தான் ஆரோக்கியமாக இருக்க காரணம் தனது மனைவி தான் என ஒரு இளம் பெண்ணை மேடை ஏற்றினாராம்.

பப்லுக்கு ஏற்கனவே பீனா என்பவருடன் திருமணமாகி 25 வயதில் ஒரு மகன் இருக்கிறார். அவரின் மகன் அஹறத் ஆட்டிசம் குறையாடு உடையவர். இதனிடையே தற்போது ஒரு இளம் பெண்ணை மனைவியென நடிகர் பப்லு கூறியது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

**இரண்டாவது திருமணம்**

மேலும் இது குறித்து வெளியான தகவலில், பப்லு மற்றும் அவரின் மனைவி பீனாவுக்கும் கருதுவேறுபாடுகள் ஏற்பட்டதால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர்.

அந்த சமயத்தில் தான் பப்லுவுக்கு மலேசியாவை சேர்ந்த ஒரு பெண் நட்பாகி இருக்கிறார்.

மலேசியாவில் பப்லு தனது தொழிலை தொடங்க அவர் தான் உதவியாக இருந்தராம்.

மேலும் சில மாதங்களுக்கு முன்பு தான் இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

முதல் மனைவி பிரிந்த நிலையில் அவரின் மகனை நடிகர் பப்லு தான் பார்த்து கொண்டு வருகிறாராம்.






## என் வயது என்னை மாற்றாது.. நான் அதன் வழியை மாற்றுவேன்– புதிய உத்வேகத்தில் ஜோதிகா

ஜியோ பேபி இயக்கவுள்ள "காதல் - தி கோர்" என்ற படத்தில் மம்முட்டி மற்றும் ஜோதிகா இணைந்து நடிக்கின்றனர்.

இப்படத்தின் மூலம் பல வருடங்களுக்கு பிறகு. மலையாள சினிமாவில் ஜோதிகா ரீ-என்ட்ரி கொடுக்க உள்ளார்.

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையான ஜோதிகா. திருமணத்துக்கு பிறகு சில வருடங்கள் சினிமாவை விட்டு ஒதுங்கி இருந்தார். பின்னர் 36 வயதினிலே படம் மூலம் மீண்டும் நடிக்க தொடங்கினார்.

இதை தொடர்ந்து மகளிர் மட்டும். நாச்சியார். காற்றின் மொழி. ராட்சசி. ஜாக்பாட். பொன்மகள் வந்தாள். உடன் பிறப்பு உள்ளிட்ட கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளை தேர்வு செய்து நடித்தார். காதல் தற்போது இவர் மலையாள திரையுலகின் முன்னணி நடிகரான மம்முட்டியுடன் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். மம்முட்டி கம்பெனி தயாரிக்கும் இப்படத்தை மலையாளத்தில் சூப்பர் ஹிட்டான "தி கிரேட் இந்தியன் கிட்சன்" படத்தை இயக்கிய ஜியோ பேபி இயக்கவுள்ளார்.

ஜோதிகாவின் பிறந்த நாளான அன்று இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டு படத்திற்கு "காதல் - தி கோர்" என்று பெயர் வைக்கப்பட்டுள்ளதாக படக்குழு அறிவித்தது.

ஜோதிகா இந்நிலையில் ஜோதிகா கடின உடற்பயிற்சி செய்யும் வீடியோ ஒன்றை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். அதில். "இந்த பிறந்தநாளுக்கு உடல் நலத்தையும் பலத்தையும் எனக்கு நான் பரிசாக தந்துக்கொள்கிறேன். வயது என்ன. என்னை மாற்றுவது. அந்த வயதை நான் மாற்றுகிறேன்!" என்று குறிப்பிட்டு உள்ளார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.



## ரூ. 500 கோடியை வசூலித்து விட்டதா பொன்னியின் செல்வன்

மணிரத்னம் அவரது சினிமா பயணத்தில் பொன்னியின் செல்வன் என்ற திரைப்படத்தை இயக்கி சாதனை செய்துவிட்டார். அத்தனை புத்தகங்களை எப்படி இவர் இரண்டு பாகங்களாக எடுத்தார் என்ற ஆச்சரியம் மக்களிடம் உள்ளது.

புத்தகத்தை படித்தவர்கள் படம் அப்படியே உள்ளது என மனதார பாராட்டியுள்ளார்கள்.

தற்போது படத்தை அதிகம் புக்கிங் செய்து வருகிறார்கள். தீபாவளி விடுமுறை வேறு வருகிறது. வரும் நாட்களில் படத்தின் வசூல் அதிகரிக்கும் என கருதப்படுகிறது.

பட வசூல்



கடந்த செப்டம்பர் 30ம் தேதி வெளியான இந்த திரைப்படத்தை மேலும் சில நாட்கள் திரையரங்குகளில் ஒளிபரப்ப திரையரங்குகள் முடிவு செய்துள்ளார்களாம். இதுவரை படம் உலகம் முழுவதும் ரூ. 460 கோடி வரை வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த தீபாவளி விடுமுறை முடிந்ததும் பட வசூல் ரூ. 500 கோடி தாண்டி சாதனை படைக்கும் என்கின்றனர்.

# தீபாவளி என்றால் என்ன? சிறப்புக்கட்டுரை

"தீபம்" என்றால் "விளக்கு". "ஆவளி" என்றால் "வரிசை". அதாவது இந்த நாளில் விளக்குகளை வீட்டில் வரிசை வரிசையாய் அடுக்கி விளக்கேற்றி இருண்டு இருக்கும் வீட்டை பிரகாசமாக வைப்பது ஆகும். தீபத்தில் பரமாத்மாவும் நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம். ஒவ்வொருத்தர் மனதிலும் ஒரு சில இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, தலைக்கணம் போன்ற எதையாவது ஒன்றை அகற்ற வேண்டும். ஒரு தீய குணத்தை எரித்துவிட வேண்டும்அதனால் தான் இதற்கு தீபாவளி என்று பெயர் வந்தது



தீபாவளி அல்லது தீப ஒளித்திருநாள் ஐப்பசி அமாவாசை முன் தினம் நரக சதுர்த்தசி அன்று கொண்டாடும் ஓர் இந்து பண்டிகையாகும். இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்களும், சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர்.

**சீக்கியர்களின் தீபாவளி** : 1577-இல் இத்தினத்தில்இ பொற்கோயில் கட்டுமான பணிகள் துவங்கியதையே சீக்கியர்கள் இந்நாளில் கொண்டாடுகின்றனர்.

**சமணர்களின் தீபாவளி** : மகாவீரர் நிர்வானம் அடைந்த தினத்தை நினைவு கூர்ந்து, இத்தினத்தை சமணர்கள் கொண்டாடுகின்றனர்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு முன் வரும் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை அதனடுத்த கார்த்திகை சுக்கிலப்பிரதமை இந்த நான்கு நாட்களும் தீபாவளி சம்பந்தப்பட்ட நாட்களாகும். தீபாவளி என்னும் சொல்லுக்கு தீபங்களின் வரிசை என்பது பொருள். உலகில் உள்ள எல்லா இந்துக்களும் இத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இது மிக மிகப் பழங்காலத்திலிருந்தே இந்துக்களின் வாழ்க்கையோடு கலந்து போன கொண்டாட்டமாகும்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் நரகன் என்ற அசுரனை வதம் செய்த போது அவனுடைய கடைசி வேண்டு கோளிற்கேற்ப தீபாவளிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது என்பது ஐதீகம். வட இந்தியாவில் சில இடங்களில் தீபாவளியன்று நரகாசுரனுடைய உருவங்களைக் கொளுத்தி கிருஷ்ண பகவானுடைய வெற்றியைக் கொண்டடுவதுண்டு.

இத்திருநாளிலே எமது அக இருள் ஒழிந்து போக வேண்டுமென்றும் அக அழுக்கு இல்லாமல் போக வேண்டுமென்றும் நமது முன்னோர்கள் இக் கொண்டாட்டத்தைக் கொண்டாடினார்கள். நரகாசுரன் கண்ணனால் ஆட் கொள்ளப்பட்டபோது தன்னைப்போல் எல்லோரும் கண்ணன் திருவடிகளை அடையவேண்டுமென்று விரும்பினான். ஆனால் நம்மவரில் பெரும்பான்மையோர் அன்றைய தினத்தில் தான் குடியும் புலாலும் உண்டு அசுரர்களாக மாறி விடுகிறார்கள். அந்த நிலை மாறி அகத்தில் விளக்கு ஏற்றுவோமாக.

**தீபாவளி பட்டாசு** : தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுவர். இல்லத்தின் மூத்த உறுப்பினர் ஒவ்வொருவர் காலிலும் நலங்கு (மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை) இட்டு மகிழ்வர். பின் எண்ணெய்க் குளியல் (கங்கா குளியல்) செய்வர். நல்லெண்ணெயில் ஓமம் மற்றும் மிளகு போட்டுக் காய்ச்சுவது சிலரது வழக்கம். மக்கள் புத்தாடை உடுத்தியும் பட்டாசுகள் வெடித்தும் மகிழ்வர்.

தீபாவளி அன்று பாரம்பரிய உடைகளை அணியவே பெரும்பாலான தென்னிந்திய மக்கள் விரும்புகின்றனர். அன்று அநேக பெண்கள் புடவையும் (குறிப்பாக பட்டுப்புடவை) ஆண்கள் வேட்டியும் உடுப்பர். தீபாவளி அன்று ஒவ்வொரு இல்லத்திலும் மங்கள இசையான நாதசுவரம் ஒலிக்கும். அன்று இனிப்புக்கள் நிறைய செய்து ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வர். பரிசுகள் தந்து மகிழ்வர். பெரியோரை வணங்கி வாழ்த்து பெறுவர். தீபாவளி இலேகியம் (செரிமானத்திற்கு உகந்தது) அருந்துவதும் மரபு.

தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம் அன்றைய தினம்இ அதிகாலையில் எல்லா இடங்களிலும் தண்ணீரில் கங்கையும் எண்ணெயில் லட்சுமியும் அரப்பில் சரஸ்வதியும் குங்குமத்தில் கௌரியும் சந்தனத்தில் பூமாதேவியும் புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுவதேயாகும்.. அன்றைய தினம் எல்லா நதிகள் ஏரிகள் குளங்கள் கிணறுகளிலும் நீர்நிலைகளும் "கங்கா தேவி" வியாபித்து இருப்பதாக ஐதீகம். அடிப்படையில் இந்துப் பண்டிகையாய் இருந்தாலும் சாதி மத வேறுபாடின்றி அனைவரும் ஒற்றுமையாய் கொண்டாடும் பண்டிகை தீபாவளி.

### தீபாவளி எதற்கு கொண்டாடுகின்றோம்?

தீபாவளி கொண்டாடுவதற்கான நிறைய காரணங்களை நமது இந்து புராணங்கள் கூறுகின்றன. அவற்றில் சில

இராமன் தனது 14 ஆண்டு வனவாசத்தை முடித்து அயோத்தி திரும்பி வருவதால் அந்நாட்டில் உள்ள மக்கள் இராமனை வரவேற்பதற்கு தங்கள் வீடுகளில் விளக்கேற்றி வரவேற்பதாக இராமாயணத்தில் சொல்லப்படுகிறது.

கிருஷ்ணன் நரகாசுரன் என்ற அசுரனைக் கொன்ற போது அந்த நரகாசுரன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று கிருஷ்ணனிடம் வேண்டிக் கொண்டதால்இ தீபாவளி என்னும் பண்டிகையை கொண்டாடுவதாக கூறப்படுகிறது.

இலங்கையை ஆண்ட இராவணன் சீதையை கடத்திச் சென்று வைத்துக் கொண்டதால் இராமன் இராவணனை எதிர்த்துப் போராடி இராவணனை அழித்துவிட்டு சீதையை மீட்டு கொண்டு தனது தம்பியான இலட்சுமணனுடன் அயோத்திக்கு செல்லும் போது அங்குள்ள மக்கள் அவர்களை வரவேற்க நாட்டில் விளக்கேற்றி கொண்டாடி மகிழ்ந்தனர். அதனால் அந்த நாள் தீபாவளியாக கொண்டாடப்படுகிறது என்று இராமாயண இதிகாசத்தில் சொல்லப்படுகிறது.

சக்தியின் 21 நாள் விரதமான கேதாரகௌரி விரதம் முடிவுற்றதும் அந்த நாளன்று சிவன் சக்தியை தனது பாதியாக ஏற்றுக் கொண்டு "அர்த்தநாரீஸ்வரர்" ஆக உருவெடுத்ததால் தீபாவளி கொண்டாடப்படுவதாக ஸ்கந்த புராணத்தில் கூறப்படுகிறது.

### தீபாவளியும் மூடநம்பிக்கைகளும் தீபா"வலி"யும் தமிழரும்!

உலகில் வாழும் அனைத்து இனங்களும் பல வகையான விழாக்களை ஆண்டு தோறும் கொண்டாடி வருகின்றன. போரில் வெற்றி பெற்ற நாள் விடுதலை அடைந்த நாள் வருடத்தின் முதன் நாள் கடவுளோ அல்லது கடவுளின் தூதரோ பூமிக்க வந்ததாக நம்பப்படுகின்ற நாள் என்று மகிழ்ச்சியையும் வெற்றியையும் விடுதலையையும் குறிக்கின்ற பலவிதமான விழாக்களை மனித இனம் கொண்டாடி வருகிறது.

ஆனால் தான் தோற்கடிக்கப்பட்ட அடிமைப்படுத்தப்பட்ட இழிவுபடுத்தப்பட்ட ஒரு நாளை மகிழ்ச்சியாக கொண்டாடுகின்ற ஒரு இனமும் இந்த உலகத்தில் உண்டு. அது வேறு யாரும் அல்ல. கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்னே வாளோடு தோன்றிய மூத்த குடி என்று தன்னை அறிமுகம் செய்கின்ற தமிழினம்தான் அது. பொங்கல் போன்ற விழாக்களுக்கு கொடுக்காத முன்னுரிமையை தீபாவளிக்கு கொடுத்து தன்னுடைய அடிமை சாசனத்தை ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொண்டிருக்கிற தமிழினமாகிய நாங்கள்தான் அந்த பெருமைக்குரியவர்கள்.

இதோ! இந்த ஆண்டும் தீபாவளி வந்து விட்டது. தமிழர்கள் புத்தாடை அணிந்து கோயிலுக்கு போகிறார்கள். நேரிலும் தொலைபேசியிலும் "தீபாவளி வாழ்த்துக்கள்" சொல்லி மகிழ்கிறார்கள். தமிழர்கடைகளில்தீபாவளிசிறப்புவிற்பனை விளம்பரப்படுத்தப்படுகின்றன. தீபாவளி திரைப்படங்கள் அணி வகுக்கின்றன. தொலைக்காட்சி வானொலி போன்ற ஊடகங்கள் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்குகிறன. புத்தக நிறுவனங்கள் தீபாவளி சிறப்பு மலர் வெளியிடுகின்றன. கொண்டாட்டம் களை கட்டுகிறது. ஆனால் இந்த தீபாவளியின் பின்னணி வரலாறு எத்தனை பேருக்கு தெரியும்? எங்களின் மூதாதையர் அழிக்கப்பட்ட நாளை தமிழினம் தோற்கடிக்கப்பட்ட நாளை நாம் கொண்டாடுகிறோம் என்பது எத்தனை பேருக்கு தெரியும்? அதைப் பார்ப்பதற்கு முன் தீபாவளியை தமிழினத்திற்குள் திணித்த ஆரியப் பார்ப்பனர்கள் தீபாவளி குறித்து சொல்லுகின்ற கதையை சுருக்கமாகப் பார்ப்போம்.

முன்பொரு காலத்தில் ஒரு அரக்கன் இருந்தானாம். அவன் பூமியை பாயாக சுருட்டி கடலுக்குள் ஒளித்து வைத்துவிட்டானாம். படைப்புத் தொழிலை செய்வதற்கு பூமி இல்லையே என்று கவலைப்பட்ட பிரம்மா விஸ்ணுவிடம் முறையிட்டாராம். விஸ்ணு பன்றியாக மாறி அரக்கனோடு சண்டை போட்டு அவனை கொன்று பூமியை மீட்டாராம். பூமிக்கு தன்னை மீட்ட பன்றியின் மீதே காதல் வந்துவிட்டதாம். பன்றியும் சரியென்று சொல்ல இருவரும் உறவு கொண்டார்களாம். அதனால் ஒரு பிள்ளை பிறந்ததாம். அவன்தான் நரகாசுரன் என்ற அரக்கனாம். அவன் தவம் செய்து தன் தாயைத் தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றானாம். வரம் பெற்ற அரக்கன் எல்லோரையும் கொடுமைப்படுத்தினானாம். கடைசியில் விஸ்ணு கிருஸ்ணனாகவும் பூமாதேவி சத்தியபாமாவாகவும் அவதாரமெடுத்து நராகசுரனோடு போரிட்டார்களாம். கடைசியில் நரகாசுரன் பெற்ற வரத்தின்படி அவனுடைய தாயாகிய சத்தியபாமாவால் கொல்லப்பட்டானாம். அவன் கொல்லப்பட்ட நாள்தான் தீபாவளியாம்.

இப்படி ஒரு ஆபாசமான புராணக் கதையைக் அடிப்படையாகக் கொண்டு இந்த தீபாவளியை ஆரியப் பார்ப்பனியம் தமிழர்களுக்குள் திணித்தது. உருண்டையாக இருக்கின்ற பூமியை எப்படி பாயாக சுருட்டலாம் என்றோ பூமியிலே இருக்கின்ற கடலுக்குள் எப்படி பூமியையே ஒளித்து வைக்கலாம் என்றோ பூமியாலும் பன்றியாலும் உறவு கொள்ள முடியுமா என்றோ கேள்விகளை எழுப்ப முடியாதபடி தமிழினத்தை மடமைக்குள் தள்ளியது.

ஆனால் தீபாவளி கொண்டாடப்படுவதன் பின்னணி வேறு. இங்கே நராகசுரன் என்று உருவகப்படுத்தப்படுபவன் யார்? புராணங்களில் அசுரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் யார்? இதற்கு பதில் தெரிந்தவர்கள் தீபாவளியை கொண்டாட மாட்டார்கள். தெரிந்த பின்பும் கொண்டாடினால் அவர்கள் சூடு சுரணை உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள்.

பாரத கண்டத்தின் வரலாறு என்பது ஆரிய திராவிடப் போரை அடிப்படையாகக் கொண்டது. திராவிடர்கள் எனப்படுகின்ற தமிழர்கள் ஆண்டு கொண்டிருந்த பெரும் நிலப்பரப்பை வந்தேறு குடிகளான ஆரியர்கள் மெது மெதுவாக ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். நில ஆக்கிரமிப்போடு மொழி ஆக்கிரமிப்பும் பண்பாட்டு ஆக்கிரமிப்பும் நிகழ்ந்தது. ஆரியர்களின் இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து தமிழர்கள் நீண்ட காலம் வீரப் போர் புரிந்தார்கள். இந்தப் போர்கள்தான் புராணக் கதைகளில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போர்களாக வர்ணிக்கப்படுகின்றன. சுர பானம் அருந்துகின்ற ஆரியர்கள் சுரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். சுர பானம் அருந்தாத திராவிடர்கள் அசுரர்கள் என்று குறிப்பிடப்பட்டார்கள். அத்துடன் அசுரர்கள் தெற்கே வாழ்பவர்கள் என்றும் புராணக் கதைகளில் குறிப்பிடப்படுகிறார்கள். கிருஸ்ணனும் சரி அதற்கு முந்தையவனாக சொல்லப்படுகின்ற இராமனும் சரி அசுரர்களை அழிப்பதற்கு தெற்கு நோக்கி படை எடுத்து வந்ததாகவே ஆரியர்களின் புராணங்கள் சொல்லுகின்றன.

11ஆம் பக்கம் பார்க்க...

10ஆம் பக்க தொடர்ச்சி...

அசுரர்கள் கறுப்பாக இருப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறார்கள். புராணக் கதைகளை ஆராய்ந்த பாரதத்தை சேர்ந்த நடுநிலையான ஆராய்ச்சியாளர்களும் மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்களும் அசுரர்கள் என்று திராவிடர்களையே குறிப்பிடப்படுகிறது என்று கூறி உள்ளார்கள். ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த போரை கூறுகின்ற கதையே இராமயணம். அன்று தமிழ் மண்ணை ஆண்ட மன்னன் இராவணனாக உருவகப்படுத்தப்படுகிறான். ஆக்கிரமிப்பு போர் நடத்திய ஆரியர்களின் மன்னனாக இராமன் இருக்கின்றான். தமிழ் மண்ணின் பல பகுதிகளை கைப்பற்றி தமிழ் மன்னர்களை ராமன் வெற்றி கொள்கிறான். கடைசியில் தமிழர்களின் தலைநகரான இலங்கை வரை சென்று பல சூழ்ச்சிகள் செய்து இராவணனையும் கொல்கிறான். இது தான் இராமயணக் கதை. இராவணனை பேரரசனாகக் கொண்டே அன்று தமிழர்களின் அனைத்து அரசுகளும் இருந்தன என்பதை இராமாயணத்தை ஆராய்கின்ற போது புரிந்து கொள்ள முடிகிறது.

இராவணனின் வீழ்ச்சிக்கு பிறகு சில காலம் கழித்து ஆரிய ஆக்கிரமிப்பை எதிர்த்து போர் புரிந்த தமிழ் மன்னர்களில் ஒருவனே நரகாசுரன். நரகாசுரனும் மற்றைய பல மன்னர்களும் ஆரிய ஆக்கிரமிப்பை எதிர்த்து போர் புரிந்து வீர மரணம் அடைந்தார்கள்.

கடைசியில் தமிழினத்தை வெற்றி கொண்ட ஆரியர்கள் தமிழர்களின் வரலாற்றை திரிவுபடுத்தினார்கள். இன்று விடுதலைப் போராளிகளை ஆக்கிரமிப்பாளர்கள் பயங்கரவாதிகள் என்று சொல்வது அன்று ஆரியர்கள் அன்று தமிழினவிடுதலைக்காக போராடியவர்களை அரக்கர்கள் என்று சொன்னார்கள். முறிக்கிய மீசையோடு கம்பீரமாக நின்று தமிழ் மண்ணைக் காக்க இறுதிவரை போராடி தன்னுயிரை ஈந்தவர்களுக்கு கொம்புகளும் கோரமான பற்களும் முளைத்து விட்டன.

**தீபாவளி பற்றி தமிழறிஞர்கள் .... தீபாவளி தமிழர்க்கு உரியதன்று!**

தீபாவளிப் பண்டிகை தமிழர்க்கு உரியதாகத் தோன்றவில்லை. நரகாசுரன் என்ற ஓர் அசுரனைக் கொன்றதற்காக மகிழ்ச்சி அடைதலைக் குறிப்பதற்காக அப்பண்டிகை வழக்கத்தில் கொண்டாடப்படுகிறது.

அது புராண மதத்தைச் சார்ந்தது. அசுரர் என்பதை இன்னார் என்று தீர்மானித்தல் கடினமாயினும் சரித்திர ஆராய்ச்சியாளர் ஆரியர் பகைவரே அசுரர் எனப்பட்டார் என்பர். ஆரியர் பகைவருள் ஆதியில் திராவிடர்களும் அடங்குவர் ஆதலின் அசுரர் கொலைக்காகத் தமிழர் மகிழ்ச்சி அடைதல் ஏற்றதன்று என்ப.

சமண சமயப் பண்டிகையே தீபாவளி தீபாவளி சமணரிடமிருந்து இந்துக்கள் பெற்றுக் கொண்ட பண்டிகை. கடைசி தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் பாவாபுரி நகரிலே அவ்வூர் அரசனுடைய அரண்மனையிலே தங்கி இருந்தபோது அங்குக் குழுமி இருந்த மக்களுக்கு அறிவுரைசெய்தருளினார். இரவு முழுவதும் நடைபெற்ற இந்தச் சொற்பொழிவு விடியற்காலையில் முடிவடைந்தது. வைகறைப் பொழுது ஆனபடியினாலே சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் அனைவரும் தத்தம் இல்லம் செல்லாமல் அவரவர் இருந்த இடத்திலேயே உறங்கி விட்டனர். வர்த்தமான மகாவீரரும் அமர்ந்திருந்த ஆசனத்தில் இருந்தபடியே இயற்கை எய்தினார். பொழுது விடிந்து எல்லோரும் விழித்தெழுந்து பார்த்தபோது மகாவீரர் இயற்கை எய்தி இருப்பதைக் கண்டு அரசனுக்கு அறிவித்தனர். அவ்வரசன் மற்ற அரசர்களை வரவழைத்து அவர்களோடு யோசனை செய்து உலகத்திற்கு அறிவொளியாகத் திகழ்ந்த மகாவீரரை மக்கள் நினைவு கூர்ந்து வழிபடும் பொருட்டு அவர் இயற்கை எய்திய நாளில் வீடு தோறும் விளக்குகளை ஏற்றி வைத்து விழாக் கொண்டாடும்படி ஏற்பாடு செய்தான். அது முதல் இந்த விழா (தீபம் ஸ்ரீ விளக்கு ஆவலி ஸ்ரீ வரிசை தீபாவலி) மகாவீரர் விடியற்காலையில் இயற்கை எய்தியபடியால் தீபாவளி என்ற பெயரில் விடியற்காலையில் கொண்டாடப்படுகிறது. விடியற்காலையில் நீராடிய பின்னர் திருவிளக்கு ஏற்றித் தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவது வழக்கமாக இருக்கிறதன்றோ!

சமண சமயம் வீழ்ச்சி அடைந்த பிறகு சமணர்கள் பெருவாரியாக இந்து மதத்தில் சேர்ந்தனர். சேர்ந்த பிறகும் அவர்கள் வழக்கமாக இந்தப் பண்டிகையைக் கொண்டாடி வந்தனர். இந்த வழக்கத்தை நீக்க முடியாத ஆரியர்கள் இதைத் தாமும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் பொருத்தமற்ற புராணக் கதைகளைக் கற்பித்துக் கொண்டார்கள். திருமால் நரகாசுரனைக் கொன்றார் என்றும் அவன் இறந்த நாளைக் கொண்டாடுவ துதான் தீபாவளி என்றும் கூறப்படும் புராணக்கதை பொருத்தமானது அன்று. அன்றியும் இரவில் போர் புரிவது பண்டைக்காலத்து இந்தியப் போர் வீரர்களின் முறையும் அன்று. சூரியன் புறப்பட்ட பிறகுதான் போரைத் தொடங்குவது பண்டைக் காலத்துப் போர் வீரர்கள் நடைமுறையில் கொண்டிருந்த பழக்கம். சமணர் கொண்டாடி வந்த மகாவீரர் இயற்கை எய்திய நினைவு நாள் தீபாவளி என்பதில் அய்யமில்லை. ஆனால் இந்தப் பண்டிகையை ஏற்றுக் கொள்ளும் மனம் இல்லாமல் புதிதாகக் கற்பித்துக் கொண்ட கதைதான் நரகாசுரன் கதை.

**ஆசிரியர்: கல்வெட்டாராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி**
**நூல்: சமணமும் தமிழும் பக்கம்: 79-80**
**தொகுப்பு . விபுலமாமணி சாஹித்யசாகரம் வி.ரி.சகாதேவராஜா**

02ஆம் பக்க தொடர்ச்சி...

முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில், இனப்படுகொலை தான் இடம்பெற்றது என்பதற்கான பிரேரணை கொண்டுவரப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது உண்மையில் மிகப்பெரிய விடயம். எதிர்பார்ப்புக்கள் வராவிட்டாலும் கூட இலங்கையில் இருக்கின்ற ஒன்பது மாகாண சபையில் ஒரு மாகாண சபை இப்பிரேரணையை நிறைவேற்றியிப்பது வரவேற்கத்தக்கது.

குறித்த மாகாண சபை தொடர்ந்திருந்தால் இன்னமும் இப்பிரேரணை வலுப்பெற்று அடுத்தகட்ட செயற்பாடுகள் முன்கொண்டு செல்லப்பட்டிருக்கும். எனினும் துரதிஸ்டவசமாக மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறாது மாகாண சபைகள் கலைக்கப்பட்ட நிலை தொடர்கின்றது.

எதிர்வரும் காலங்களில் தேர்தல் ஒன்று நடைபெற்று மாகாண சபைகள் மீளவும் அமைக்கப்படுகின்றபோது இன்னமும் வடகிழக்கில் இவ்விடயங்கள் தொடர்பில் வினைத்திறனாக எம்மால் செயற்படமுடியும்.

எனினும் அரசின் தற்போதைய நோக்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தாது காலங்கடத்துவதாகவே இருக்கின்றது. மாகாண சபைகள் தமிழ் மக்களுக்கு அவசியம்.

07ஆம் பக்க தொடர்ச்சி...

இதேபோல் வட்டுவாகல் 600 ஏக்கர் . விமானப்படைக்கென ஒலுமடு அம்பகாமம் பகுதியில் 8000 ஏக்கர் , அம்பகாமம் ஏனைய காணி 500 ஏக்கர் , ஒட்டுசுட்டான் பிரதேச சபை உப அலுவலகம் , நூல் நிலையம் ஆயுள்வேத வைத்தியசாலை உள்ள இடங்கள் 2 ஏக்கர் , ஒட்டுசுட்டான் பழைய சந்தைக்காணி 1 ஏக்கர், ஒட்டுசுட்டான் முந்திரிகைத்தோட்டம் 15 ஏக்கர், ஒட்டுசுட்டான் இராணுவமுகாம் 10 ஏக்கர் புதுக்குடியிருப்பு பொதுவிளையாட்டு மைதானம் 2 ஏக்கர் , பழைய சந்தைக்காணி சனசமூக நிலையம், பொதுமலசலகூடம் 1 ஏக்கர், பொன்னம்பலம் வைத்தியசாலை இருந்த காணி 2 ஏக்கர், பிரதேச செயலகத்திற்கு முன்காணி 10 ஏக்கர் தேவிபுரத்தில் சிவசாமி என்பவரின் காணி 2 ஏக்கர், இரணைப்பாலை வீதி தேவிபுரத்தில் நவமணிப்பிள்ளையார் கோவில் உள்ள பகுதி 30 ஏக்கர், 10 பண்ணைகள் உள்ளடங்கலாக 1000 ஏக்கர் திட்டத்தில் கென்பாம், டொலர்பாம் ஆர்.வி.ஜி. கம்பனி காக்காபோட், சிலோன்தியேட்டர்ஸ் , நாவலர் பண்ணை இவர்கள் உள்ளிட்ட 10 பேருடைய 10,000 ஏக்கர் காணியும் அபகரிக்கப்பட்டுள்ளது .

இதேபோல் கொக்குத்தொடுவாய் மண லாறு 3417 ஏக்கர் , கேப்பாபிலவில் தனியார் காணி 526 ஏக்கர் , சீனியாமோட்டையில் ஒரு பகுதி 10 ஏக்கர் , கேப்பாபிலவில் ஏனைய காணி 2000 ஏக்கர் , ஒதிய மலையும் அதனை அண்டிய பகுதிகளும் 3000 ஏக்கர் உள்ளடங்கலாக 29 ஆயிரத்து 311 ஏக்கர் நிலம் முல்லைத்தீவில் அபகரிக்கப்பட்டுள்ளது .

மணலாறு பிரதேசம் வெலி ஓயா என்ற பெயரில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. கரைதுறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய இரு பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக மணலாறு பிரதேச செயலர் பிரிவு காணப்படுகின்றது. கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குள் ஜனகபுர கிரிபன்வெவ, அகட்டுஹால்வெவ கல்யாணபுர, சம்பத்நுவர ஆகிய கிராமங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குள் கஜபாபுர , நவகல்யாணபுர அத்தாவட்டுநுவெவ , நிக்கவெவ ஆகிய பகுதிகளும் சிங்களவர் குடியேற்றப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றன .

இதில் கஜபாபுர என்னும் கிராமம் எமது பழைய சிலோன் தியேட்டர்ஸ் சுமார் 300 புதிய குடியேற்றங்கள் 2010 ஆம் ஆண்டிற்குப் பின்பு செய்யப்பட்டுள்ளன இவர்களுக்கு தலா ஏக்கர் குடியிருப்புக்காணியும் ஒரு ஏக்கர் விவசாயக் காணியும் வழங்கப்பட்டுள்ளது இப்பிரதேசம் தமிழர்களின் விவசாய நிலங்களாகும் . தனிக்கல்லு , உடங்கா போன்ற குக்கிராமங்கள் இதனுள் அடங்கும் வயல்வெளிகளாகும் .

இதேபோன்று நிக்கவெவ என்னும் இடத்தில் 450 புதிய குடியேற்றங்களும் கல்யாணபுரவில் 400 புதிய குடியேற்றங்களும் கிரிபன்வெவ எனப் பெயர் சூட்டிய இடத்திலிருந்து சூரியனாறுக்கு செல்லும் வழியில் 400 புதிய குடியேற்றங்களும் 2010 இற்குப் பின் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன .

இதில் கஜபாபுர என சிங்களப் பெயரிடப்பட்ட தற்பொழுது ஒதியமலைக் கிராமத்தை ஆக்கிரமித்து உள்ளது . இது மகாவலி எல் வலயம் எனக் குறிப்பிடப்பட்டு சிங்களக் குடியேற்றம் செய்யப்படுகின்றது . இதேபோல் யாழ் . மாவட்டத்தில் வலி . வடக்கில் 24 கிராம அலுவலர் பிரிவுகளில் 6500 ஏக்கர் தமிழ் மக்களுடைய நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது . 12 பாடசாலைகள் , ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி , 25 இந்துக் கோவில்கள் , 15 கிறிஸ்தவ தேவாலயங்கள் , மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை , காங்கேசந்துறை மீன்பிடித் துறைமுகம் இவை அனைத்தும் தற்பொழுது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

சுமார் 81.5 மீற்றர் நீளமான கடற்கரையோரங்களும் 144.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பகுதியும் அதியுயர்பாதுகாப்பு வலயத்தினால் விழுங்கப்பட்டுள்ளன.

சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட 24 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இன்னமும் அகதிமுகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் சேமமடுவில்இருந்துகொழவைத்தகல்லுக்கு வரும் வழியில் சுமார் 350 புதிய குடியேற்றங்களுக்கு காணிகள் தற்பொழுது சுத்தப்படுத்தப்படுகின்றன. இவர்களுக்கு சுமார் 1000 ஏக்கர் விவசாயக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

இதேபோல் நெடுங்கேணி வடக்கில் கரப்புக்குத்தி 10 ஏக்கர் , கனகராஜன்குளம் பெரியகுளம் 25 ஏக்கர் , மருதோடை 15 ஏக்கர் , ஒலுமடு ஓடைவெளி 20 ஏக்கர் , புளியங்குளம் இராமனூர் 15 ஏக்கர் , கனகராஜன்குளம் குறிசுட்டகுளம் 10 ஏக்கர் , குளவிசுட்டான் வேலன்குளம் 15 ஏக்கர் ஆகிய நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மதியாமடுவுக்கும் நயினமடுவுக்கும் இடையில் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் எமது மக்கள் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக பாவித்த 500 ஏக்கர் நிலம் சிங்களத் தொழிலதிபருக்கு 100 வருடக்குத்தகைக்கு வழங்கப்பட்டு காணி முழுவதும் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தரவுகளை படடியற்படுத்துவதிலும் அறிக்கைகள் விடுவதிலும் வடமாகாணசபை தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகிறது. புலம்பெயர் நாடுகளில் கூட மேடைப்பேச்சுக்களில் இவற்றைக் குறித்துப் பேசும் தமிழ்அரசியல்வாதிகள் தமிழ்க்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவதற்கு ஏற்ற நடவடிக்கையை உடனடியாக எடுக் வேண்டும். இல்லையெனில் தமிழ்மக்கள் அரசுக்கு எதிராக கிளர்தெழவேண்டிய நிலை உருவாகும். அது சர்வதேச அளவில் கொண்டுசெல்லப்படுமாயின் இலங்கை அரசாங்கத்துக்கு அதுதொடர் சங்கடங்களை ஏற்படுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆகவே இப்போது எதிர்நொக்கும் பிரச்சினைகளையே சமாளிப்பதில் விழிபிதுங்கி நிற்கும் அரசாங்கம் தமிழ்மக்களுக்கு சொந்தமாக நிலத்தை அபகரிப்பதில் கரிசனை காட்டாது எல்லா மக்களும் தனது நாட்டின் பிரஜைகளே. அனைவருக்கும் தமது சொந்த நிலத்தில் வாழும் சுதந்திரம் உள்ளது என்பதை உணர்ந்து கொண்டால் சரி.



# பல்சுவை கதம்பம்



## பொடுகு நீங்க இயற்கை முறையினால சில டிப்ஸ் !!

எலுமிச்சையை தோலோடு சாறு பிழிந்து வேர்களில் தடவி மசாஜ் செய்து 10 நிமிடங்கள் ஊற வைத்து தலைக்குக் குளியுங்கள். தேன் : தேனில் கொஞ்சம் பூண்டுகளை தட்டிப் போட்டு ஊற வைத்து அதை வேர்களில் தடவி தலைக்குக் குளித்தால் பலன் கிடைக்கும்.

தேங்காய் பால் எடுத்த பின் கையை தலையில் நன்றாகத் தேய்த்து, சிறிது நேரம் கழித்து மிதமான நீரில் தலையை அலசினால் பொடுகு, மறைந்து விடும். முதல்நாள் சாதம் வடித்த தண்ணீரை எடுத்து வைத்து, மறுநாள் அதை தலையில் தேய்த்து குளித்தால், பொடுகு நீங்கும்.

தயிர், முட்டை மற்றும் எலுமிச்சை சாறு கலந்து தலையில் தேய்த்துக் குளிக்க பொடுகு மறையும். துளசி, கறிவேப்பிலையை அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றுடன் கலந்து தலையில் தடவி சிறிது நேரம் கழித்து குளித்தால் பொடுகு பிரச்சனை நீங்கும்.

தேங்காய் எண்ணெய் பொடுகுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஒரு பாத்திரத்தில் தேங்காய் எண்ணெய்யை எடுத்து லேசாக சூடாக்கவும். இப்போது எண்ணெய் கொண்டு தலையை நன்றாக மசாஜ் செய்து சுமார் அரை மணி நேரம் வைத்திருந்த பின் தலையை அலசவும். இதனால் உங்கள் உச்சந்தலையில் உள்ள பொடுகை நிச்சயம் குறைக்கலாம்.



## தீபாவளி ஸ்பெஷல்: கரகரப்பான காராபூந்தி செய்வது எப்படி...?

**தேவையான பொருட்கள்:**


**கடலை மாவு – 1 கப்**
**அரிசி மாவு – 2 டேபிள் ஸ்பூன்**
**சோடா உப்பு – கால் டீஸ்பூன்**
**மஞ்சள் தூள் – சிறிதளவு**
**மிளகாய் தூள் – 1 டீஸ்பூன்**
**பூண்டு – தேவைக்கு ஏற்ப (தட்டி கொள்ளவும்)**
**எண்ணெய் – தேவையான அளவு**
**உப்பு – தேவைக்கு ஏற்ப**

**செய்முறை:**

முதலில் ஒரு பெரிய பாத்திரத்தில் கடலை மாவு, அரிசி மாவு, பேக்கிங் சோடா, மஞ்சள் தூள், மிளகாய் தூள் மற்றும் உப்பு சேர்த்து தண்ணீர் ஊற்றி, நன்கு திக்காக பேஸ்ட் போல் கரைத்துக் கொள்ளவும்.

பின்னர் எண்ணெய்யை ஊற்றி காய்ந்ததும், பூந்தி கரண்டியில் மாவை விட்டு, எண்ணெய்யில் விழும்படி தேய்த்து விடவேண்டும். சிவந்து பொன் நிறமாக வந்ததும் எடுத்துவிடவும். இத்துடன் எண்ணெய்யில் பொரித்த வேர்க்கடலை, மிளகாய்த்தூள் சேர்க்கவும்.

பிறகு கறிவேப்பிலை மற்றும் பூண்டை எண்ணெய்யில் பொரித்து நன்கு கசக்கி இந்தக் கலவையுடன் சேர்த்து நன்றாக கலந்துவிட்டால், நன்கு கரகரப்பான காராபூந்தி தயார். இதை காற்றுப்புகாதவாறு எடுத்து வைத்துக்கொண்டால் நீண்ட நாட்கள் வைத்து பயன்படுத்தலாம். இதன் சுவை மிகவும் அருமையாக இருக்கும்.



## காலை உணவை தவிர்ப்பதால் ஏற்படும் பிரச்சனைகள் என்ன...?

தற்போது மாறிவரும் உணவு பழக்க வழக்கங்களில் இருந்து உடலை காப்பது மிகவும் முக்கியமானது. முன்னோர்கள் சத்தான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளையும் நமக்கு கொடுத்தனர். ஆனால் இந்த நிலைமை இப்போது மாறிவிட்டது. அதனால் தற்போதைய தலைமுறையினருக்கு நோய் எதிர்ப்புத் தன்மையும் குறைந்துள்ளது.

தற்போதைய தலைமுறையினர் போதுமான அளவிற்கு நோய் எதிர்ப்புத்தன்மை இல்லாமல் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். அதற்கு காரணம் உணவு பொருட்கள் அனைத்தும் கலப்படமாக மாறிவருவதும் ஒரு காரணம் ஆகும். விரும்பியதை உண்கின்றோம் என்ற பெயரில் துரித உணவுகளையும், அடைக்கப்பட்ட பேக்கட் உணவுகளையும் எடுத்துக்கொள்வதால் தேவையில்லாத உடல் உபாதைக்கு ஆளாகின்றனர். இதனால் உடல் ஆரோக்கியம் மிகவும் பாதிக்கப்படுகிறது.

உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதற்கு சரியான நேரத்தில் சரியான உணவை சாப்பிடாமல், சரியான நேரத்தில் தூக்கம் இல்லாமல் இருப்பதும் ஆகும். இதனால் உடல் பருமன் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது. குறிப்பாக காலை சிற்றுண்டியை எடுத்துக் கொள்ளாமல் தவிர்க்கின்றனர். இதனால் சரியான நேரத்தில் சாப்பிடாமல் இருப்பதால் அல்சர் உருவாக வாய்ப்பு உள்ளது.

சர்க்கரை நோய் வருவதற்கும் உணவு பழக்கவழக்கத்தில் மாறுபாடு இருந்தால் கட்டாயம் டைப்-2 சர்க்கரை நோய் வர வாய்ப்பு உள்ளது என கூறப்படுகிறது. மேலும் தேவையான நேரத்தில் உணவு சாப்பிடாமல் இருந்தால் கட்டாயம் மன அழுத்தம் போன்றவை வர வாய்ப்பு உள்ளது. எனவே முடிந்தவரை காலை நேர உணவை தவிர்க்காமல் சாப்பிடுவது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியம் ஆகும்.



## சுவையான முறையில் முந்திரி கொத்து செய்வது எப்படி...?

**தேவையான பொருட்கள்:**

**முழு பச்சை பாசி பயறு – 1 கப்**
**வெல்லம் – முக்கால் கப்**
**அரசி மாவு – 1:.2 கப்**
**துருவிய தேங்காய் – 1:.2 கப்**
**ஏலக்காய் பொடி – அரை டீஸ்பூன்**
**மஞ்சள் தூள் – அரை டீஸ்பூன்**
**உப்பு – தேவையான அளவு**
**எண்ணெய் – பொரிக்க தேவையான அளவு**

**செய்முறை:**

வெல்லத்தை கொதிக்கவைத்து வெல்ல பாகு தயாரித்து கொள்ளவும். ஓர் சூடான கடாயில் பச்சை பாசி பயறை நன்கு வறுத்து சிறிது நேரம் கழித்து அதனை பொடியாக அரைக்கவும். பின்பு தேங்காயை பொன்னிறமாக வறுத்து எடுத்து கொள்ளவும். அதில் அரைத்து வைத்துள்ள பாசி பயறு மற்றும் ஏலக்காய் பொடி போன்றவற்றை சேர்த்து நன்கு கலக்கவும்.

இப்போது தயாரித்து வைத்துள்ள வெல்லப் பாகை மீண்டும் சூடுபடுத்தி அதனுடன் கலக்கி வைத்துள்ள பாசிப்பயறு கலவையை சிறிது சிறிதாக சேர்த்து, அவை அனைத்தும் வெல்ல பாகோடு சேறுமாறு நன்கு கலக்கவும். அவை நன்கு கலந்த பின்பு வெதுவெதுப்பான சூடுடன் இருக்கும் போதே அதனை சிறு சிறு உருண்டைகளாக பிடிக்கவும்.

பின்பு வேறு பாத்திரத்தில் அரிசி மாவு, மஞ்சள் தூள், உப்பு, ஆகியவற்றை சேர்த்து தண்ணீர் கலந்து இட்லி மாவின் அடுத்த நிலை பதத்திற்கு கலக்கவும்.

தயாரித்த உருண்டைகளை மாவில் முக்கி எடுத்து கடாயில் எண்ணெய் ஊற்றி பொரித்தெடுக்கவும். கொத்தாக வேண்டுமென்றால் இரண்டு மூன்று உருண்டைகளை சேர்த்து ஒன்றாக பொரிக்கவும். சுவையான முந்திரி கொத்து தயார். இதனை சிறிது நாட்கள் வைத்தும் சாப்பிடலாம்.

# மலையகம் : அடுத்து என்ன? – வி.தேவராஜ்



இனிவரும் காலத்தையாவது 'மக்களுக்கான அரசியலாக' செய்ய வாருங்கள். மலையகத்தின் தலைவிதியை மாற்றி எழுதப் புறப்பட்ட 'மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளை' நிர்வாணமாக நிற்க வைத்துள்ளது ஜநா மனித உரிமைப் பேரவை அறிக்கை. மலையக மக்கள் இலங்கையில் குடியேறி இரு நூற்றாண்டை தொட்டு நிற்கின்ற அதாவது 200 வருடங்களை எட்டியுள்ள இவ் வேளையில் ஐ.நா மனித உரிமைப் பேரவை 'மலையக மக்கள் நவீன அடிமைத்தனத்தின் சின்னமாக' உள்ளதை வெளி உலகுக்குப் பறைசாற்றி நிற்கின்றது. இது ஒன்றும் பரம ரகசியமில்லை. காலம் காலமாக பேசப்பட்ட விடயம்தான்.

சர்வதேசரீதியில் பேசப்பட்டபோதும் ஐ.நாவில் முதன் முறையாக மலையக விவகாரம் வந்துள்ளது. மலையக மக்களின் 'பிச்சைக் காசில்' வயிறு வளர்க்கும் ஒரு இளம் தொழிற்சங்க அரசியல்வாதி 'நாட்டை நாம் காட்டிக் கொடுப்பதா எனக் கூறி மலையகம் குறித்து காண முயன்ற விடயங்களைத் திசை திருப்பிவிட முயன்றதாகத் தகவல். சிங்கள தேசமே அணிதிரண்டு ஐ.நா வாசலில் நிற்கும் போது மலையக நிலையை அறிக்கையிட வந்தவர்களை திசைதிருப்பிவிட முயன்றதை மலையக மக்கள் மன்றத்தின் முன் வைக்கின்றேன்.'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல் மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளில் இது ஒரு உதாரணம். துரதிஸ்டவசமாக மலையக தொழிற்சங்க அரசியலில் இன்று பதம் பார்க்காமலே நிலைமையைக் கூறிவிடலாம்.

மலையக தொழிற்சங்க அரசியலில் இன்று ஒரு நடேச ஐயரைப் பார்க்க முடியாதுள்ளது. ஒரு வெள்ளையனையோ அல்லது ராஜலிங்கத்தையோ தேடிப் பார்க்க முடியாதுள்ளது துரதிஸ்டவசமே.! நீங்கள் யார்? என்று ஒரு மலையக மகனையோ அல்லது மகளையோ கேட்டால், எங்களை மலையகத் தமிழர்கள் என்பர். இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர் என்பர். சிங்கள மொழியில் நாம் 'வத்தே தெமழ.' வடக்கு கிழக்கு மொழியில் நாம் 'வடக்கத்தையான்' எமக்கு 'தோட்டக்காட்டான்' என்ற பெயரும் உண்டு.

அன்று எமது வறுமை விலை போனது. அதனால் பல தொண்டர்களின் வாழ்வு வளமாகியது. இன்று எமது வாக்குகள் விலைபோகின்றன. சிங்களத் தேசியக் கட்சிகளுக்கு வாக்குகளை விற்று எமது மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகள் சுகபோகத்தில் திளைக்கின்றனர். முன்பு வேலை செய்து வயிறு கழுவ தோட்ட வேலை இருந்தது. இன்று அது பறிபோய்க் கொண்டிருக்கின்றது. நாம் கொஞ்சம் கொஞ்சமாக அன்றாட காய்ச்சிகளாக மாற்றப்பட்டு நிச்சயமற்ற வாழ்க்கையுடன் வீதியில் வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். கொரோனா அதனைத் தொடர்ந்து இன்றைய பொருளாதார நெருக்கடி எங்கள் வாழ்க்கையையே புரட்டிப்போட்டுவிட்டது. கொரோனாவும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளும் எல்லோருக்கும் பொதுவானதுதான். இவைகளில் இருந்து மீண்டெழ மற்றவர்களால் முடியும். இதற்கென கொஞ்சகாலம் எடுக்கலாம். ஆனால் நாம் அரசியல் அநாதைகள். எமக்கென யார் இருக்கின்றனர். எமது வாழ்க்கையே அன்றாடம் போராட்டமாகவே போய்க் கொண்டிருக்கின்றது. எமது சந்ததியினர் தொழிற்சங்க உரிமைகளுக்காகப் போராடினர். சுதந்திர இலங்கை எம்மை அரசியல் அநாதைகளாக்கியது. அரசியல் உரிமைகளுக்காக பிரஜா உரிமைக்காக எமது போராட்டம் தொடர்ந்தது. 1977இல் சௌமியமூர்த்தி தொண்டமானை நாடாளுமன்றத்திற்கு பிரதிநிதியாக அனுப்பினோம். பிரஜா உரிமைப் பிரச்சனைக்கு இறுதியாக 1988 இல் கொண்டுவரப்பட்ட நாடற்றோருக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டம் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் நாம் இன ஒடுக்குமுறை மனித உரிமை மீறல் மட்டுமல்ல நாம் இன்றும் இரண்டாந்தரப் பிரஜைகளே.

எமது நிகழ்கால எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாக நிற்கின்றது. இவ்வேளையில் ஐநாவில் நாம் பேசு பொருளாக வந்துள்ளோம். இது எமது விடியலை நோக்கிய பயணத்தின் முதல்படி என நினைக்கின்றோம். மலையக மக்களை ஐ.நா அறிக்கையாவது விழித்தெழ வைக்கட்டும் என்றே கூறுவர்.

**மலையகத்தைப் பொருத்து மேலோட்டமாக மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம்.**

**சுதந்திரத்துக்கு முந்தைய காலம்**
**சுதந்திரத்துக்கு பிந்தைய காலம்**
**சௌமிய மூர்த்தி தொண்டமான் காலம்**
**சௌமிய மூர்த்தி தொண்டமானுக்குப் பிந்தைய காலம்.**

மூன்று நான்கு மலையக தலைமுறையை தின்ற வரலாறு இது. இன்றும் அதே வரலாறுதான். கொஞ்சம் மாற்றத்துடன் தொடர்கின்றது. இப்போது இந்தச் சமுதாயம் சமத்துவத்திற்கும் கௌரவத்திற்காகவும் போராடி வருகின்றது. வாழ்க்கை நிலைமைகள் முன்னேறியிருந்தாலும் செம்மையான சமத்துவம் எனும் அந்தஸ்தினை இம்மக்கள் அனுபவிப்பதற்கு இன்னும் அதிக விடயங்கள் செய்யப்படவேண்டியுள்ளன. மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. மிகவும் முக்கியமான முதல் விடயமாக மனித உரிமைகள் மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுவது குறிப்பிடப்படவேண்டும் என்று The plight of Tamils of Indian origin in Sri Lanka என்ற தலைப்பில் 'த நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ்' தளத்தில் வி.சூர்யநாராயணன் எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மலையக மக்களின் பிரச்சனைகளை ஸ்தலத்தில் கண்டறிவதற்காக ஐ.நா. விசேட தூதுவரான டொமொயா ஒபொகடா 2021நவம்பர் 26 இற்கும் டிசம்பர் 3 இற்கும் இடையில் இலங்கைக்கு விஜயம் செய்தார். விஜயம் செய்த தூதுவர் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களையும் சந்தித்தார். தான் கண்டறிந்த விடயங்களின் பூர்வாங்க அறிக்கையினைத் தூதுவர் 2021 நவம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

இறுதி அறிக்கையானது தற்போது 2022செப்டெம்பரில் ஐ.நாவில் சமர்ப் பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி. மலையக மக்கள் என்றுமே வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வந்த சூழ்நிலையில் இன்று பொருளாதார நெருக்கடி அவர்களை எழுந்து பார்க்க முடியாத அளவிற்கு தாக்கத்தை செலுத்தியுள்ளமையை காண முடிகின்றது. தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்களாவர். தனிநபர் வருமானம் வாழ்க்கை நிலைமைகள் நீண்ட ஆயுள் கல்வி அடைவுகள் மற்றும் பெண்களின் நிலை - இவற்றைக் கணிப்பிட எந்த அளவுகோலையும் பிரயோகியுங்கள் - அவர்கள் ஏணியின் அடியிலேயே இருக்கின்றனர்.

**ஐ.நா. விசேட தூதுவர் பின்வருமாறு கோடிட்டுக்காட்டியுள்ளார்:**

நவீன அடிமை முறைகள் இனத்துவப் பரிமாணங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாக 200 வருடங்களுக்கு முன்னர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்கள் அவர்களின் வம்சாவளியின் அடிப்படையில் பல்வேறு வடிவிலான பாகுபாடுகளுக்கு இன்றும் முகங்கொடுத்து வருகின்றனர்.' 2017ஆம் ஆண்டில் இலங்கை தேயிலைத் தொழிற்துறையின் 150ஆவது வருடப் பூர்த்தியினைக் கொண்டாடியது. பொருளாதாரத்தில் தேயிலைத் தொழிற்துறையின் வகிபாத்திரத்தினைக் கோடிட்டுக்காட்டுவதற்கும் துறையின் உற்பத்தியினை எவ்வாறு உயர்த்துவது என்பது பற்றியும் துறையினை எவ்வாறு நவீனமயப்படுத்துவது என்பது பற்றியும் அரசாங்கமும் தோட்ட உரிமையாளர்களும் பல கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆனால் கண்டியிலுள்ள சமூக அபிவிருத்தி நிறுவனம் மட்டுமே உலகம் முழுவதிலும் பல லட்சக்கணக்கானவர்களுக்கு அதிகாலைக் களிப்பினை வழங்கும் இரண்டு இலைகளையும் ஒரு கொழுந்தினையும் (கலாநிதி முல்க் ராஜ் ஆனந்தினால் எழுதப்பட்ட நாவல்) உற்பத்திசெய்பவர்கள் பற்றிய ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தது. தோட்ட உரிமையாளர்களினதும் தொழிலாளர்களினதும் மாறுபடும் வாழ்க்கைகள் கட்டாயம் கோடிட்டுக்காட்டப்பட வேண்டும் என்றும் வி.சூர்யநாராயணன் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகள் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் சகாப்தத்திற்கு பிற்பட்ட இன்றைய மலையக வரலாற்றுடன் தொடர்புபட்டவர்கள். இவர்களில் பலர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பாசறையில் வளர்ந்தவர்களும் உள்ளனர். தொண்டமன் அவர்கள் என்ன செய்தார் என்று உங்களில் பலர் கேள்வி எழுப்பலாம்.

**இலக்கின்றி மலையகத் தலைமைகள்.**

நடேச ஐயர். மலையக காந்தி ராஜலிங்கம். வெள்ளையன். அஸீஸ்.தொண்டமான் இவ்வாறு பலர் அங்குலம் அங்குலமாக செதுக்கிய மலையகத்தில் இன்றைய தெழிற்சங்க அரசியல்வாதிகள் சுகமாக அமர்ந்து தொழிற்சங்க அரசியலை செய்கின்றீர்கள். மலையகம்குறித்த எதிர்காலப் பார்வை.பயணிக்க வேண்டிய இலக்கு என்பன நடேச ஐயர் .இராஜலிங்கம். வெள்ளையன்.அஸீஸ் .தொண்டமான் போன்றவர்களுக்கு இருந்தது.

**மலையகம்குறித்த இன்றைய தொழிற்சங்க அரசியல் தலைவர்களின் இலக்கு என்ன? எதிர்காலப் பார்வை என்ன?**

துரதிஸ்டவசமாக இன்றைய மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளிடம் மலையகம்குறித்த எதிர்காலச் சிந்தனை .இலக்கு என்பன இன்றியே தெழிங்சங்க அரசியலை செய்கின்றனர்.

**வாக்கு சேகரிக்கும் முகவர்கள்**

'கட்சித் தலைகள்' பிரிந்து நின்று தேசியக் கட்சிகளில் போட்டியிடுவதை மலையகத்தில் பார்க்கலாம். சில சந்தர்ப்பங்களில் ஒரே கட்சியில் பிரிந்து நின்று தேசியக் கட்சிகளின் ஒரு சின்னத்தில் போட்டியிடுவதும் நடைபெறுகின்றது. இவ்வாறு போட்டியிடுவதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாவது. அமைச்சர்களாவது தமது 'ஆலவட்டங்களுக்கு' உயர்பதவிகளைப் பெற்றுக் கொடுப்பது போன்றவைகளைத் தவிற இவர்களால் பெரிதாக சாதித்ததாக இல்லை.

உண்மையில் இவர்கள் தேசியக் கட்சிகளுடன் இணைந்தோ பிரிந்து நின்றோ போட்டியிட்டு மலையக வாக்குகளை தேசியக் கட்சிகளுக்கு வாரி வழங்கும் "முகவர்களாகவே "செயற்படுகின்றனர். இதற்கான கையூட்டே அமைச்சர் பதவிகள் மற்றும் தமது 'ஆலவட்டங்களுக்கான' உயர் பதவிகள்.

**மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளிடம் சில கேள்விகள்..!**

நீதிமன்ற தீர்ப்பை நிராகரித்து நிற்கும் பெருந் தோட்டக் கம்பெனிகளை வழிக்குக் கொண்டுவர உங்களால் முடிந்ததா?

தோட்டத்தொழிலாளர்கள்அன்றாடம்காய்ச்சிக ளாகமாற்றப்படுகின்றனர்.உங்களால் தடுத்து நிறுத்த முடிந்ததா?

இதனால் அவர்களுக்கான EPF மற்றும் சலுகைகள் மறுக்கப்படுகின்றனவே.

2015 ஆம் ஆண்டில் இருந்து பேசப்படும் 1000 ரூபாவை பெற்றுக் கொடுக்க முடியாமற் போனதேன்?.

மலையகம் குறித்து பொது வேலைத்திட்டம் உள்ளதா?

மலையக மக்களை சொந்தக் காலில் நிற்க வைக்கும் திட்டங்கள் உள்ளனவா?

தொழிற்சங்கங்களுக்குள் போட்டி ஏன். தொழிலாளர்களுக்காக ஒற்றுமைப்பட முடியாதா?

சந்தா இல்லாததால் பொது வேலைத்திட்டம் குறித்து தொழிற்சங்கங்கள் தற்போது பேசுகின்றன. உண்மைதானே?

தீப் பிடிக்கும் தோட்டக் குடியிருப்புகள். தொடர்ச்சியாக இது தொடர்பான செய்திகள் வெளிவருகின்றன. சுமார் 300க்கும் மேற்பட்ட தோட்ட வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிகின்றது.

எரிந்து நாசமாகியது நூற்றாண்டு கால பழமையான காலணித்துவ சின்னங்கள் மாத்திரமல்ல 300க்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையும் சிறுக சிறுக சேர்த்த உடமைகளும் கஷ்டப்பட்டுத் தேடிவைத்த ஆவணங்களும்தான் என்பது உங்களுக்குத் தெரியாதா?

பாலங்கள் இன்றி ஆற்றில் அடித்துச் செல்லப்படும் மக்கள்.

மண்சரிவு அபாயத்தில் இடம் பெயர்ந்தோர். மீரியபத்தை மக்களை நோக்கி வந்த உதவிகளுக்கு என்ன நடந்தது?

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் 25 ஆயிரம் ஹெக்டர் தோட்டக் காணிகள் காடாக்கப்பட உள்ளன. இந்தத் தோட்டங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தவர்களினதும் எதிர்காலம் கேள்விக் குறியாக நிற்கின்றது.

'சிஸ்டம் சேன்ஜ்'பற்றி பேசும் தலைமைகள் இன்னும் பேசலாம். ஆனால் நீங்களோ இலங்கையின் அரசியல் 'சிஸ்டம் சேன்ஜ்'பற்றி பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். இது பற்றி பேசும் மலையக தொழிங்சங்க அரசியல்வாதிகளே இந்த மாற்றத்தால் மலையகத்தில் ஏற்படப்போகும் மாற்றம் என்ன என்று கூறுவீர்களா?

**தொடரும்...**

# விளையாட்டு செய்திகள்

## இலங்கை கால்பந்து சம்மேளன தேர்தலை 69 நாட்களுக்குள் நடத்த விளையாட்டுத்துறை அமைச்சு இணக்கம்

இலங்கை கால்பந்து சம்மேளன தேர்தலை அன்று (20) முதல் எதிர்வரும் 69 நாட்களுக்குள் நடத்துவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சிமதி தர்மவர்தன இதனை குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆம் திகதி நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு அமைய, விளையாட்டு அமைச்சின் உதவி செயலாளர் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

விரைவாக தேர்தலை நடத்தாவிடின், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தினால் தடை விதிக்கப்படக்கூடும் என முறைப்பாட்டாளர் தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி திமுது களுஆராச்சியின் குழுவினரான சட்டத்தரணி இராஜ் டி சில்வா மன்றுக்கு அறிவித்தார்.

இதனால் சேவை பெறுநர்களுடன் கலந்துரையாடி, கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலை நடத்துவதற்கான திகதியை கலந்தாலோசிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணையை எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரான ஈஸ்வர் உபர் மற்றும் உபாலி ஹேவகே ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

## ரி-20 உலகக்கிண்ணம்: அயர்லாந்து அணிக்கு 147 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது மேற்கிந்திய தீவுகள்!

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின், குழு பி- 11ஆவது தகுதி சுற்று லீக் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி, அயர்லாந்து அணிக்கு 147 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது.

ஹோபர்ட் மைதானத்தில் தற்போது நடைபெற்று வரும் இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 146 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பிரெண்டன் கிங் 62 ஓட்டங்களையும் ஜோன்சன் சார்லஸ் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அயர்லாந்து அணியின் பந்துவீச்சில், கரேத் டெலானி 3 விக்கெட்டுகளையும் மெக்கார்த்தி மற்றும் சிம்பி சிங் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தற்போது 147 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி அயர்லாந்து அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது.



## டி20 உலகக் கிண்ணம் – வீரர் விலகல்!

டி20 உலகக் கிண்ண அவுஸ்திரேலிய அணியில் இருந்து ஜோஷ் இங்லிஷ் விலகியுள்ளார். அக்டோபர் 16 முதல் நவம்பர் 13 வரை 2022 டி20 உலகக் கிண்ண போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது.

மொத்தமாக 45 ஆட்டங்கள் அடிலெய்ட், பிரிஸ்பேன், கீலாங், ஹோபர்ட், மெல்போர்ன், பெர்த், சிட்னி நகரங்களில் நடைபெறவுள்ளன.

நவம்பர் 9, 10 திகதிகளில் அரையிறுதி ஆட்டங்கள் சிட்னி, அடிலெய்டில் நடைபெறவுள்ளன. இறுதிச்சுற்று ஆட்டம் மெல்போர்ன் மைதானத்தில் நடைபெறுகிறது.

டி20 உலகக் கிண்ண போட்டியின் பிரதான சுற்றுக்கு (சூப்பர் 12) அவுஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், பங்களதேஷ், இங்கிலாந்து, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா ஆகிய 8 நாடுகளும் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள 4 அணிகள் முதல் சுற்றில் போட்டிட்டு அதன் வழியாக சூப்பர் 12 சுற்றுக்குத் தேர்வாகவுள்ளன.

சூப்பர் 12 சுற்றின் முதல் ஆட்டத்தில் அக்டோபர் 22 அன்று சிட்னியில் அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளும் பெர்த்தில் இங்கிலாந்து - ஆப்கானிஸ்தான் அணிகளும் அக்டோபர் 23 அன்று மெல்போர்னில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதவுள்ளன.

இந்நிலையில் டி20 உலகக் கிண்ண போட்டியில் இருந்து அவுஸ்திரேலிய வீரர் ஜோஷ் இங்லிஷ் விலகியுள்ளார். சிட்னியில் கோல்ஃப் விளையாடியபோது கையில் காயம் ஏற்பட்டதால் தற்போது உலகக் கிண்ண போட்டியில் இருந்து விலக வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. ஆஸி. அணியின் மாற்று விக்கெட் கீப்பராக ஜோஷ் இங்லிஷ் கருதப்பட்டதால் இன்னொரு விக்கெட் கீப்பரைத் தேர்வு செய்யவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் அலெக்ஸ் கேரி தேர்வாக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.




## ரி-20 உலகக்கிண்ணம்: தகுதிப் போட்டியில் ஐக்கிய அமீரகத்தை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி!

ரி-20 உலகக்கிண்ணத் கிரிக்கெட் தொடரின், குழு ஏ- ஆறாவது தகுதி லீக் போட்டியில் இலங்கை அணி 79 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது. ஜீலோங் மைதானத்தில் அன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், இலங்கை அணியும் ஐக்கிய அரபு அமீரகமும் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஐக்கிய அரபு அமீரக அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 152 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக பெத்தும் நிஸங்க 74 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஐக்கிய அரபு அமீரக அணியின் பந்துவீச்சில், மெய்யப்பன் ஹெட்ரிட் விக்கெட்டும் ஸாவுர் கான் 2 விக்கெட்டுகளையும் அப்சல் கான் மற்றும் ஆர்யன் லக்ரா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 153 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஐக்கிய அரபு அமீரக அணி, 17.1 ஓவர்கள் நிறைவில் 73 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், இலங்கை அணி 79 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, அப்சல் கான் 19 ஓட்டங்களையும் ஜுனைத் சித்திக் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், துஸ்மந்த சமீர மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் மகேஷ் தீக்ஷன 2 விக்கெட்டுகளையும் பிரமோத் மதுஷான் மற்றும் தசுன் சானக ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக 60 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 6 பவுண்ரிகள் அடங்களாக 74 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட பெத்தும் நிஸங்க தெரிவுசெய்யப்பட்டார். எதிர்வரும் 20ஆம் திகதி நெதர்லாந்து அணியை எதிர்கொள்ளும் இலங்கை அணி, அப்போட்டியில் வெற்றிபெறும் பட்சத்தில் பிரதான உலகக்கிண்ண தொடரின் போட்டிகளுக்குள் நுழையும்.



# உலக பார்வை




## பிரிட்டன் பிரதமர் லிஸ் டிரஸ் திடீர் இராஜினாமா!

பிரிட்டன் பிரதமர் லிஸ் ட்ரஸ் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் அரசியல் மற்றும் பொருளாதார குழப்பம் நிலவி வரும் நிலையில், பிரதமர் லிஸ் டிரஸ் தனது பதவியை திடீரென இராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது. அடுத்தடுத்து அமைச்சர்கள் பதவி விலகிய நிலையில் லிஸ் டிரஸ் இராஜினாமா செய்திருக்கிறார். பதவியேற்ற 45 நாட்களில் அவர் பதவி விலகியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை இந்திய வம்சாவளியான அந்நாட்டின் உள்துறை அமைச்சர் வெல்லா பிரேவர்மென் (42) தனது பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.



## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு!

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை சற்று அதிகரித்துள்ளது. பிரண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை தற்போது 92 டொலர் 42 காசுகளாக பதிவாகி உள்ளது. WTI (WTI) மசகு எண்ணெய் விலை 85 டொலர் 98 காசுகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## இலங்கையில் சீன இராணுவ வீரர்கள் நடமாட்டம் தமிழக கடலோர பகுதிகளின் பாதுகாப்பு அதிகரிப்பு

தமிழக கடலோர பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக The Hindu செய்தி வெளியிட்டுள்ளது. சீன இராணுவ வீரர்கள் நடமாட்டம் இலங்கையில் அதிகமாகக் காணப்படுவதால், பாதுகாப்பை அதிகரிக்குமாறு இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், தமிழக கடலோர பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் கடலோர பொலிஸார் தீவிரமாக கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் கடலில் பயணிக்கும் படகுகள் சோதனையிடப்படுவதுடன், கன்னியாகுமரியில் இருந்து கடலுக்கு செல்லும் மீனவர்களிடமும் வழக்கத்தை விட வித்தியாசமாக தென்படும் படகு, மற்றும் நபர்கள் குறித்து பொலிஸாருக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கரையோர மாவட்டத்தில் காணப்படும் 11 கடலோர சோதனைச் சாவடிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக The Hindu செய்தி வெளியிட்டுள்ளது. கன்னியாகுமரி தங்கும் விடுதிகளுக்கு வரும் வெளிநபர்கள் குறித்து தகவல் தெரிவிக்க விடுதி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக The Hindu வெளியிட்டுள்ள செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மின் நிலையங்கள் மீது ரஷ்யாவின் தாக்குதலால் இருளில் மூழ்கிய உக்ரைன் நகரங்கள்

உக்ரைன் மீதான போர் தாக்குதலை ரஷ்ய இராணுவம் மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக உக்ரைனில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது. இதில் தலைநகர் கிவ் உள்பட பல நகரங்களில் கடுமையான மின் தடை ஏற்பட்டுள்ளது. இது குறித்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறும்போது,

"ரஷ்யாவின் தாக்குதலில் 40 சதவீத மின் நிலையங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இதனால் நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டுள்ளது. மின் உற்பத்தியை சரி செய்ய முயற்சி நடக்கிறது. மாலை நேரங்களில் மின்சாரத்தை குறைவாகப் பயன்படுத்த மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இன்று முதல் அத்தியாவசியமில்லாத மின்சாதனங்களைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மின்சாரத்தை மக்கள் கவனமாக பயன்படுத்தினால் வரும் நாட்களில் மின் தடை நேரம் படிப்படியாக குறைக்கப்படும்" என்றார்.

உக்ரைனிலுள்ள முக்கிய மின் நிலையங்கள் ரஷ்யாவின் தாக்குதலில் கடுமையாக சேதம் அடைந்துள்ளதால் அந்நகரம் இருளில் மூழ்கியுள்ளது. உக்ரைனின் சில பகுதிகளில் காலை 7 மணி முதல் இரவு 11 மணி வரை மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளதாகத் தெரிய வருகிறது.



## இந்தோனேஷியாவில் Syrup மருந்துகளுக்கு தற்காலிகத் தடை

இந்தோனேஷியாவில் இவ்வருடத்தில் மாத்திரம் 99 சிறுவர்கள் உயிரிழந்ததையடுத்து, அங்கு அனைத்து Syrup மருந்துகளையும் தடை செய்ய அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தோனேஷியா அனைத்து syrup வகை மருந்துகளின் விற்பனையை தற்காலிகமாக தடை செய்துள்ளதுடன், Diethylene Glycol மற்றும் Ethylene Glycol அடங்கிய, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உள்நாட்டு Paracetamol Syrup-களையும் உன்னிப்பாக அவதானிக்க தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நான்கு வகையான இருமல் திரவ மருந்தை (syrup) காம்பியாவில் உட்கொண்ட 66 சிறுவர்கள் உயிரிழந்தமையைத் தொடர்ந்து இந்தோனேஷியாவில் தடை அறிவிப்பு வெளியாகியுள்ளது.

எனினும், இந்தோனேஷியாவில் குழந்தைகள் உட்கொண்ட மருந்து எதுவென இதுவரை அடையாளம் காணப்படவில்லை. காம்பியாவில் குழந்தைகளின் உயிரிழப்பிற்கு காரணமான 4 வகையான மருந்துகள் இந்தியாவின் ஹரியான மாநிலத்தை கேந்திரமாகக் கொண்ட மருந்து உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், காம்பியாவில் குழந்தைகளின் உயிரிழப்பிற்கு காரணமாக அமைந்து குறித்த மருந்து இந்தியாவில் விற்பனை செய்யப்படுவதில்லை என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காம்பியாவில் குழந்தைகள் உயிரிழந்தமையைத் தொடர்ந்து இலங்கையில் குறித்த வகை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றதா என விசாரணை செய்யப்படுவதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



# இலங்கை எழுத்தாளருக்கு புக்கர் விருது

இலக்கியத்துக்கு வழங்கப்படும் உயரிய விருது புக்கர் விருது ஆகும். இந்த ஆண்டுக்கான புக்கர் விருது இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணதிலகா எழுதிய தி செவன் மூன்ஸ் ஆப் மாலி அமைடா என்ற புத்தகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.


## புக்கர் விருது


இலங்கை உள்நாட்டுப் போர் குறித்து இந்த நாவல் அமைந்துள்ளது. புக்கர் விருதை வென்றதற்காக 50,000 பவுண்ட் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

இறுதிப் போட்டிக்கு தேர்வான 6 புத்தகங்களில் இருந்து இலங்கை எழுத்தாளர் எழுதிய புத்தகத்துக்கு புக்கர் பரிசு அறிவிக்கப்பட்டது. புக்கர் பரிசை பெறும் இரண்டாவது இலங்கை எழுத்தாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை சொந்தங்களே எங்கள் கதைகளை கூறுவோம் ..கூறிக்கொண்டே இருப்போம்....நிகழ்வின் இறுதியில் ஷெகான் தமிழில் கூறிய வார்த்தைகள் இவை...அவர் மும்மொழியிலும் உரையாற்றி இலங்கை மண்ணின் மைந்தன் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியது மட்டுமில்லாது படைப்பாளிகள் மதம், இனம், மொழிகளை கடந்த அனைவருக்கும் பொதுவானவர்கள் என்பதை உணர்த்தியுள்ளார்.

கடந்த ஆண்டு தென்னாப்பிரிக்காவை சேர்ந்த தேமன் கால்கட் என்பவர் "The Promise" என்ற நாவலுக்காக இந்த விருதை பெற்றார். இந்தியாவை சேர்ந்தவர்களில் 2008-ம் ஆண்டு அரவிந்த் அடிகா, 2006-ம் ஆண்டு கிரண் தேசாய், 1997-ம் ஆண்டு அருந்ததி ராய் ஆகியோர் புக்கர் பரிசை வென்றுள்ளனர்.







### தீபாவளியே வருக...

வாடிய மக்கள் தேடிய வளமே
நாளும் கிடைத்தது அரிதினும் அரிது
ஆண்டிற்கு ஒருமுறை வருகின்ற திருவிழா
அயலவர் கவலைகள் கொஞ்சம் மறப்பர்
உற்றார் உறவினர் கூடி களிக்கும்
உன்னதம் தருகின்ற தீபாவளி திருநாள்
தீயவை அழிந்து நன்மைகள் பெருகிட
படைத்தவன் அளித்திட்ட பசுமை திருநாள்
தீபாவளியே ஒளியுடன் வலுவுடன் வருக
தீஞ்சுவை தமிழ்த்தேன் அமிழ்தென தருக

வி.அபிவர்ணா
முல்லைத்தீவு

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 23.10.2022 அன்று வெளியிடப்பட்டது.